விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 18 திங்கட்கிழமை (04.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 289

## அரசுக்குள் இருக்கும் சதிகாரர்களை உடன் வெளியேற்ற வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் ரொஷான் தெரிவிப்பு

(கொழும்பு)
"அரசு முன்னெடுத்துவரும் மக்கள் சார்பான ஆட்சியைச் சீர்குலைக்கும் சூழ்ச்சியாளர்கள் அரசுக்குள்ளேயே இருக்கின்றனர். இந்தச் சதிகாரர்களை அரசிலிருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும்"
இவ்வாறு மாகாண ▶19

### போராட்டங்களில் ஈடுபட்டால்

## கடுமையான நடவடிக்கை

### அமைச்சர் சரத் வீரசேகர எச்சரிக்கை

(கொழும்பு)
நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில் போராட்டங்களில் ஈடுபடும் தொழிற் சங்கங்கள் மற்றும் குழுக்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர எச்சரித்துள்ளார்.
(19ஆம் பக்கம் பார்க்க)



### துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த

## இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(கரணவாய்)
தூக்கில் தொங்கி இறந்ததாகத் தெரிவித்து இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண் ▶19

## தாயையும் மகனையும் தாக்கிவிட்டு திருட்டு

### நாவற்குழியில் இருவர் கைது

(சாவகச்சேரி)
தென்மராட்சி - நாவற்குழிபிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு வேளையில் தாயும் மகனும் தனித்திருந்த வீட்டிற்குள் நுழைந்து கொடூரத் தாக்குதல் நடத்தி ▶19

### ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவம், சமாதானம், நீதி ஆகியவற்றுக்காக

# தமிழர்களின் அபிலாஷைகளை அரசு பூர்த்தி செய்ய வேண்டும்

### யாழில் இந்திய வெளியுறவு செயலாளர் ஷ்ரிங்லா கோரிக்கை

*(யாழ்ப்பாணம்)*
**ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவம், சமாதானம், நீதி மற்றும் கௌரவம் ஆகியவற்றுக்காக தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்ய வேண்டும் என இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா கோரிக்கை விடுத்துள்ளார்.**

இலங்கைக்கு விஜயம் செய்த அவர் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திலுள்ள கலாசார மத்திய நிலையம் மற்றும் பலாலி விமான நிலையம் ஆகியவற்றை பார்வையிட்டுள்ளார்.
இதன்போது ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், ▶20



### யாழ்.பல்கலைக்கழக

## விரிவுரையாளர்கள் 5 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
இலங்கை முழுமையும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்த ▶19



## ராஜபக்ஷ அரசை எந்தவொரு சதியாலும் கவிழ்க்க முடியாது

### பங்காளிகளிடம் பஸில் வீராப்பு

(கொழும்பு)
"ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி அரசு நிலையான அரசு. இந்த அரசை எந்தவொரு சூழ்ச்சியாலும் கவிழ்க்க முடியாது. அரசுக்குள் எவரும் இருக்க ▶19

### கொரோனாவால்

## 40 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் மேலும் 40 கொரோனா மரணங்கள் பதிவானதாக சுகா ▶19

## நல்லாட்சிக்கு ஏற்பட்ட நிலைமையே கோட்டாவுக்கும்

### கனியவள தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)
திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை இந்திய நிறுவனத்திற்கு தொடர்ச்சியாக வழங்கும் தீர்மானத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு ▶20

## கடமைக்கு இடையூறு; வானத்தை நோக்கி சூடு

### ஊரெழுவில் பொலிஸார் எச்சரிக்கை

(குப்பிழான்)
வலி.கிழக்கு பிரதேச சபையின் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் கடமைக்கு இடையூறு விளைவித்ததால் பொலிஸார் வானத்தை நோக்கி சூடு நடத்தி எச்சரித்தனர்.
இந்தச் சம்பவம் ▶19

# அரிசி இறக்குமதியின் பின் நிர்ணய விலை அறிவிக்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா

(கொழும்பு)

நாட்டுக்குத் தேவையான ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் அரிசிக்கான விலையை நிர்ணயிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கமைய அரிசி இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் தற்போதுள்ளதைவிட குறைந்த விலைக்கு அரிசியை விநியோகிக்க முடியும் என்று கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

வத்தளையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எந்தவொரு வரவு - செலவுத் திட்டமும் வெளியிடப்படுவதும், இரத்து செய்யப்படுவதும் மக்களின் நலனுக்காகவே ஆகும். தற்போது தட்டுப்பாடின்றி மக்களுக்கு அரிசியை விநியோகிக்கக் கூடியதாகவுள்ளது. ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் தற்போதுள்ளதைவிட குறைந்த விலைக்கு அரிசியை விநியோகிக்க முடியும்.

நாம் ஆட்சியை பொறுப்பேற்க முன்னர் நெல்லுக்கான கொள்வனவு விலை 30 - 35 ரூபாயாகக் காணப்பட்டது. ஆனால் தற்போது நெல்லுக்கான கொள்வனவு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி 2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும். மாபியா என்று கூறப்படுவதை நான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

காரணம் சகலரும் வர்த்தகர்களாவர். அவர்கள் தமது இலாபத்தை அதிகரித்துக் கொள்வதில் அவதானம் செலுத்துகின்றனர். அதே போன்று விவசாயிகள் தமது இலாபத்தை அதிகரிப்பதில் அவதானம் செலுத்துகின்றனர் என்றார். (ஞா)


# துயர் பகிர்கின்றோம்

எமது யூனியன் கல்லூரியின்
இணைந்த கணிதபாட
சிரேஷ்ட ஆசிரியர்
திரு. **எஸ். பிரதீபன்**
அவர்களின் பாசமிகு மாமனார்



## தம்பையா முருகையா

அவர்கள் இறைபதமடைந்த
செய்தி கேட்டு நாமும்
துயரடைவதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 31.07.1935 மறைவு 01.10.2021

ஆசிரியர் கழகம்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

[C-2737]


# 820 லீற்றர் கோடா எழுதுமட்டுவாளில் மீட்பு

(கரணவாய்)



தென்மராட்சி எழுதுமட்டுவாள் பகுதியில் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 820 லீற்றர் கோடாவும் உற்பத்தி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக மதுவரித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து உதவி மதுவரி ஆணையாளர் தர்மசீலன், மதுவரி அத்தியட்சகர் தங்கராசா ஆகியோரின் ஆலோசனைக்கமைய நிலையப் பொறுப்பதிகாரி ராஜ்மோகன் தலைமையிலான மதுவரி நிலையத்தினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்டனர்.

இதன்போதே கோடாவும் உற்பத்தி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஞா-60)

# சாவகச்சேரிப் பகுதியில் மிதிவெடி கண்டுபிடிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-கல்வயல் இல்வாரை குளக்காணியில் துப்புரவு நடவடிக்கையில் ஈடுபட்டபோது மிதிவெடி ஒன்று காணி உரிமையாளரால் இனங்காணப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும் முறைப்பாடு வழங்கப்பட்டு மூன்று தினங்கள் ஆன நிலையிலும் மிதிவெடி அகற்றப்படவில்லை என அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதி ஒருவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் தரப்பை வினவியபோது நீதிமன்ற உத்தரவைப் பெற்று விசேட அதிரடிப்படை ஊடாக அகற்றப்படும் எனத் தெரிவித்துள்ளது. (ஞா)


# 16ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 1953 04 26

ஆண்டவன் அடியில் 2005 10 01

அமரர்

## பொன்னுத்துரை சரவணபவன்

( ராசா – மண்டைதீவு )

திதி : அமரபக்க திரயோதசி

எந்தையே! எம் அன்புத் தந்தையே!
அன்பான சகோதரனே! காவியமாய் நிறைந்துவிட்ட தெய்வமே!
பாசவலை விரித்துவிட்டு பாதியிலே எமை விட்டு
பரமனிடம் நீங்கள் சென்று
பதினாறு வருடங்கள் வந்தது அப்பா.....
பாரினில் நாம் வாழ நல்வழி காட்டிடுங்கள்
பக்குவமாய் நாம் இருக்க துணையாய் இருந்து நீங்கள்
எமை ஆசீர்வதியுங்கள் அப்பா... அப்பா ....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவோடு வாழும்
குடும்பத்தினர்

[C-2718]


# 800 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் மேலும் 800 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 520,430 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கோவிட்-19 தொற்றிலிருந்து மேலும் 652 பேர் குணமடைந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள நாளாந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கோவிட்-19 தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 459,298 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)


# கண்ணீர் அஞ்சலி



எமது அன்பிற்கும் பாசத்திற்குமுரிய
அம்மையார்
திருமதி

## சிவக்கொழுந்து அருளம்பலம்

(சின்னத்தாளையடி.
தர்மக்கேணி, பளை )

தோற்றம் 15.04.1940 மறைவு 03.10.2021

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

அன்பு உறவுகள்
ஜாம்புறுவான் தோட்டம், பளை.

# அரசின் தவறான நிதிக்கொள்கையே

# பொருளாதார நெருக்கடிக்கு காரணம்

## லக்ஸ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**இலங்கையில் கொவிட் தொற்றினால் பொருளாதார நெருக்கடி ஏற்படவில்லை. மாறாக தற்போதைய அரசாங்கத்தின் தவறான நிதிக் கொள்கைகள் காரணமாகவே நாட்டின் பொருளாதாரம் சரிந்துவிட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

“கொவிட் -19 தொற்று நோயால் ஆசிய பிராந்தியத்தில் பொருளாதார நெருக்கடியை எதிர் கொள்ளும் ஒரே நாடு இலங்கை ஆகும் என அவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

தொற்றுநோய்களின் போது இந்தியா உட்பட அனைத்து நாடுகளும் பொருளாதாரத்தையும் வெளிநாட்டு இருப்புக்களையும் நிர்வகித்ததாக குறிப்பிட்ட அவர், எனினும் இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு 50 சதவிகிதத்திற்கு மேல் குறைந்து விட்டதாக கூறினார்.

எவ்வாறாயினும், கடந்த இரண்டு தேர்தல்களின் போது ஆதரவளித்த தொழிலதிபர்களுக்கு ஆதரவாக தற்போதைய அரசாங்கம் வற் வரியை குறைத்துள்ளது.

இதனால் அரசாங்கத்திற்கு பெரும் வருமானம் குறைவு ஏற்பட்டுள்ளது.

எனவே தற்போதைய அரசாங்கத்தின் தவறான நிதிக் கொள்கைகள் நாட்டின் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு பங்களிப்பதாக லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தார். (4-5)

## இந்திய வெளிவிவகார செயலாளர் திருகோணமலைக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார செயலாளர் ஹர்ஷ்வர்தன், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் உள்ளிட்ட குழுவினருடன் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்துள்ளார்.

அங்குள்ள எண்ணெய் குதங்கள் அடங்கிய வளாகத்தையும் அவர் பார்வையிட்டார்.

அதேவேளை இந்திய வெளிவிவகார செயலாளர், நேற்று முற்பகல் கண்டி தலதா மாளிகையில் மதவழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர், திருகோணமலைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5)



## ஆட்பதிவுத் திணைக்கள சேவைகள் ஆரம்பம்

(கொழும்பு)

ஆட்பதிவு திணைக்களத்தின் சேவைகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

அதன்படி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டலுக்கமைவாக அனைத்து அலுவலகங்களிலும் இன்று முதல் பொது மக்களுக்கான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எவ்வாறாயினும் ஒரு நாள் சேவை முன்னெடுக்கப்படாது என ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது. (4-5)

# மீண்டும் நாளை ஒன்றுகூடும்

## அரசின் பங்காளிக்கட்சித் தலைவர்கள்

(கொழும்பு)

கெரவலப்பிட்டிய யுகதனவி மின்னுற்பத்தி நிறுவனத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்குவது குறித்து அரசாங்கத்திற்குள் புதாகரமாக வெடித்திருக்கும் பிரச்சினையை அடுத்து அரசாங்கத்திலுள்ள பங்காளிக் கட்சிகளின் 10 தலைவர்கள் நாளை மீண்டும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இந்த குழு அண்மையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து யுகதனவி மின் நிலைய பிரச்சினை பற்றி கலந்துரையாடிய போதிலும் சாதகமான உடன்பாட்டை எட்ட முடியவில்லை.

இதனையடுத்து இவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து இது குறித்து கலந்துரையாட முடிவு செய்தனர். ஆனால் அமெரிக்கா சென்ற ஜனாதிபதி நாட்டுக்கு திரும்பாததால், அவர்களுக்கு அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை.

ஜனாதிபதியுடனான கலந்துரையாடலைக் கோருவதற்காக தயாரிக்கப்பட்ட கடிதம் இன்னும் அனுப்பப்படவில்லை, முன்னதாக தயாரிக்கப்பட்ட கடிதம் திருத்தப்பட்டு நாளை ஜனாதிபதிக்கு அனுப்பப்படும் என்று பங்காளிக் கட்சி ஒன்றின் தலைவர் தெரிவித்தார். (4-5)

## கொள்கலன்களில் கசிவு

# கொழும்பில் நங்கூரமிட்டது

## சிங்கப்பூர் கப்பல்



(கொழும்பு)

சுத்திகரிப்பு பொருட்களைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள் அடங்கிய கொள்கலனில் கசிவு ஏற்பட்டதன் காரணமாக சிங்கப்பூர் கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

சிங்கப்பூரிலிருந்து கடந்த 25 ஆம் திகதி பயணத்தை ஆரம்பித்த தலாசா பெட்ரஸ் எனப்படும் குறித்த கப்பல் நேற்றுக்காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. சேதமடைந்த கொள்கலனை அகற்றி அதைச் சரி செய்த பின்னர் கப்பல் மீண்டும் துறைமுகத்தை விட்டு வெளியேறும் எனக் கொழும்பு துறைமுக பேச்சாளர் தெரிவித்தார். (4-5)

## தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் வெற்றிடங்களுக்கான சிபாரிசுகள் கோரல்

(கொழும்பு)

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் பதவியில் தற்பொழுது காணப்படும் வெற்றிடம் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வெற்றிடங்களுக்கு சிபாரிசுகளைக் கோருவதற்கு பாராளுமன்றப் பேரவை தீர்மானித்திருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

இதற்கமைய சட்டத் தரணிகள் சங்கம், பதிப்பாளர்கள் சங்கம், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள், ஏனைய சிவில் சமூக அமைப்புக்களிடமிருந்து சிபாரிசுகளைக் கோருவதற்கு பாராளுமன்றப் பேரவை தீர்மானித்திருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அண்மையில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் ஒன்லைன் முறையில் நடைபெற்ற பாராளுமன்றப் பேரவைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (4-5)

# சென்னை, ராஜஸ்தான் கடும் மோதல்

# 7 விக்கெட்டுக்களால் ராஜஸ்தான் அபார வெற்றி



இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் 47 ஆவது போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 07 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான்ரோயல்ஸ்அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 04 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அணிசார்பில் அதிகபடியாக ருதுராஜ்கெய்வாட் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க பந்துவீச்சில் ராஜஸ்தான் அணியின் ராகுல் தெவாடியா 03 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இந்நிலையில், 190 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் 17.3 ஓவர்கள் நிறைவில் 03 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணிசார்பில் அதிகபடியாக ஷிவம் துபே ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களையும் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய ஜெய்ஸ்வால் 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஷர்துல் தாகூர் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (4-6)

# உலகக்கிண்ண போட்டிக்காக புறப்பட்டது இலங்கை அணி




2021 இருபது-20 உலகக் கிண்ணம் மற்றும் ஓமானுடனான இரு போட்டிகளில் பங்கெடுப்பதற்காக தசூன் சானக்க தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணியானது நேற்று நாட்டிலிருந்து புறப்பட்டது.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகும் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்துக்கு முன்னதாக இலங்கை அணி, ஓமான் கிரிக் கெட் அணியு டன் இரு இருபது-20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

அதன்படி இலங்கை ஓமானுடன் தனது முதல் போட்டியை ஒக்டோபர் 07 ஆம் திகதியும், இரண்டாவது போட்டியை 09 ஆம் திகதியும் விளையாடுகிறது. போட்டிகளின் பின்னர் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு இலங்கை அணி திரும்பும்.

உலகக் கிண்ண தகுதிச் சுற்றுப் போட்டிகளுக்கு முன், இலங்கை அணி பங்களாதேஷ் மற்றும் பப்புவா நியூ கினியாவுக்கு எதிராக இரண்டு பயிற்சிப் போட்டிகளில் விளையாடும்.

இந்தியாவுக்கு எதிரான இருபது-20 தொடரை வென்ற போதிலும், இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை முழுமையாக இழந்தது. (4-6)

# ஆசிய மேசைப்பந்தாட்டத்தில் அசத்திய இலங்கை அணி

ஆசிய மேசைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கட்டாரில் நடைபெற்று வரும் 25 ஆவது ஆசிய மேசைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டியின் கலப்பு இரட்டையர் போட்டியில் பங்கேற்ற இரண்டு அணிகளுமே தோல்வியைத் தழுவின. இதே வேளை, தனிநபர் பிரிவு அடிப்படையிலான அணிக்கான போட்டியில் பங்கேற்றிருந்த இலங்கை மகளிர் அணி ஆசியாவின் 12 ஆவது இடத்தை பிடித்தது.

ஆசிய மேசைப்பந்தாட்ட வரலாற்றில் இலங்கை மகளிர் அணியின் சிறந்த தர நிலை பெறுபேறாகும். (4-6)

## இன்றைய போட்டி

vivo IPL

DELHI CAPITALS VS CHENNAI SUPER KINGS

# மும்பையை இலகுவாக வீழ்த்தியது டெல்லி




இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் 46ஆவது போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி04 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இந்நிலையில், 130 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி 19.1 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.


அணிசார்பில் அதிகபடியாக ஸ்ரேயாஷ் ஐயர் 33 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க பந்துவீச்சில் மும்பை இந்தியன்ஸ் அணியின் ட்ரெண்ட் போல்ட், ஜயன்ட் யாதவ், க்ருணல் பாண்ட்யா, பும்ரா மற்றும் நதன் குல்டர்நைல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். (4-6)

# இலங்கை- இந்திய மீனவர் விவகாரம்; சுமுகமான தீர்வு எட்டப்படும்

## சுப்பிரமணியன் சுவாமி தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் உண்மையான நண்பன் இந்தியா என்பதை ராஜபக்ஷவினரின் ஆட்சியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்திய இலங்கை மீனவர்கள் விவகாரம் தீராத பிரச்சினையாக நீடித்துக் கொண்டிருக்கின்றது.

இந்த விடயம் சம்பந்தமாக முக்கியமாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இரு அயல்நாடுகளுக்கு இடையில் இவ்விதமான நிலைமை தொடர்வது பொருத்தமற்றதாகும்.

ஆகவே இலங்கையின் அமைச்சரவையில் அந்த விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைச் சந்தித்து பிரத்தியேகமான பேச்சுக்களில் ஈடுபடவுள்ளேன்.

குறிப்பாக அந்தப் பேச்சுவார்த்தை இருநாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கும் சுமுகமான தீர்வொன்றை நிரந்தரமாகப் பெறுவதை மையப்படுத்தியதாகவே இருக்கப்போகின்றது எனத் தெரிவித்தார். (4-5)

# அதிவேக நெடுஞ்சாலை ஊடாக வடக்கு, கிழக்கு, தெற்கு இணைப்பு



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு பிரதேசங்களை அதிவேக நெடுஞ்சாலை ஊடாக இணைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்பார்ப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய பிராந்திப் பணிப்பாளர் கெனிச்சி யோக்கோயமாவிடம் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நெடுஞ்சாலை அமைச்சர் பெர்ணான்டோவுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் கெனிச்சியோக்கோயமாவுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் நெடுஞ்சாலை அமைச்சில் நடைபெற்றது.

இலங்கையின் கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டம், வீதிபாதுகாப்பு, போக்குவரத்து நெரிசல் முகாமைத்துவ திட்டமொன்றை புதிதாக ஆரம்பித்தல் மேலும் புதிய வீதி அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்தல் என்பன தொடர்பாக இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

தற்போது இலங்கையில் வீதி அபிவிருத்தி முன்னேற்றம் மிக உயர்ந்த மட்டத்தில் இருப்பதால் எதிர்காலத்தில் இலங்கைக்கு உதவ ஆசிய அபிவிருத்தி வங்கி மிகவும் ஆர்வத்துடன் இருப்பதாகவும் ஆசிய அபிவிருத்திவங்கி பணிப்பாளர் அமைச்சரிடம் தெரிவித்தார். (4-5)

# ஆசனங்களின் எண்ணிக்கையே பயணிகளின் எண்ணிக்கை

## மீறினால் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ஆசன எண்ணிக்கைக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச்செல்லும் பேருந்துகளை மறு அறிவித்தல் வரை பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான பேருந்துகளின் அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். தனியாருக்கு சொந்தமான பேருந்துகள் பயணிக்கும் அளவு ஒப்பீட்டளவில் குறைவாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிடார்.

கொரோனாத் தொற்று நிலை காரணமாக வேறு தொழில்களை நாடிச்சென்றுள்ள பேருந்து சாரதிகள் மீண்டும் தொழிலுக்கு திரும்பாமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (4-5)

# மாற்றுத்திறனாளிகளுக்கு நடமாடும் வாக்களிக்கும் முறைமை வேண்டும்

## நிமல் புஞ்சிஹேவா வலியுறுத்து

(கொழும்பு)

மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்கு நடமாடும் வாக்களிக்கும் முறையொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்றும், பார்வையற்றவர்கள் ப்ரெயில் முறையின் கீழ் வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் புதிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா வலியுறுத்தினார்.



தேர்தல்களுக்கான வேட்புமனுக்களைக் கையளிக்கும்போது சொத்துக்கள், பொறுப்புக்களை வெளிப்படுத்தும் பொறிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற தேர்தல் நடத்தை விதிசட்டபூர்வமாக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவைச் சந்தித்தபோதே அவர் இதனைக் கூறினார். (4-5)


# சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சிமன்றத்திற்குட்பட்ட வட்டாரம்:11, மீனாட்சியம்மன் வீதி, 22/15, 22/16 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் வல்லிபுரம் பெண் தெய்வானை அம்மா (உ.கோ: தியாகராசா பெண் பரமேஸ்வரி) என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி, வல்லிபுரம் கைம்பெண் தெய்வானை பிரசித்த நொத்தாரிசு கிருஸ்ணபிள்ளை துரைசிங்கம் முகதாவில் 1947.09.11 ஆம் திகதியிடப்பட்ட 1274 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதிமூலம் அவ்வுர் மகள் தியாகராசா பெண் பரமேஸ்வரியம்மாவுக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

பின்னர் சங்கத்தானை சாவகச்சேரி பொன்னுத்துரை தியாகராசா சூரியகுமார் பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் கந்தசாமி முகதாவில் நிறைவேறிய 1991.06.01 ஆம் திகதியிடப்பட்ட 18287 ஆம் இலக்க அறுதி உறுதியில், பிரசித்த நொத்தாரிசு கிருஸ்ணபிள்ளை துரைசிங்கம் முகதாவில் 1947.09.11 ஆம் திகதியிடப்பட்ட 1274 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதிப்படி ஏகபுத்திரனான எனக்கு வந்தடைந்த முதுசமும் ஆட்சியுமானதெனக் குறிப்பிட்டு நெல்லியடி கரவெட்டி வீரகத்தி இராசதுரைக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

பின்னர் நெல்லியடி கரவெட்டி வீரகத்தி இராசதுரையும் பெண் பகவதியும் பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் கந்தசாமி முகதாவில் நிறைவேறிய 1991.10.16 ஆம் திகதியிடப்பட்ட 18519 ஆம் இலக்க அறுதி உறுதிமூலம் சங்கத்தானை சாவகச்சேரி தியாகராசா சூரியகுமாருக்கும் பெண் கௌரிநாயகிக்கும் அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதனவிபரம்:**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோயிற்பற்று சாவகச்சேரி இறை "ஈனைவாரிவளவு" நிலப்பரப்பு ஐந்து (05). இதில் வடக்குப் பக்கமாக பகுதி நீக்கி உத்தரவுபெற்ற நில அளவையாளர் வல்லிபுரம் சிவராசா அவர்களால் 30.05.2020 ஆம் திகதியில் அளந்து வரைந்த 7528 இலக்க அளவைப்படத்தின்படி நிலப்பரப்பு 3 குளி 17.00. இதற்கு எல்லை.

வடக்கு மோகனதாசன் பெண் சாமினிக்குரிய ஆதனம்
கிழக்கு ஒழுங்கை
தெற்கு வல்லிபுரம் பெண் தெய்வானைப்பிள்ளைக்குரிய ஆதனம்
மேற்கு ஒழுங்கையும் சுப்பையா பெண் நல்லம்மாவுக்குரிய ஆதனமும்

தற்போது தியாகராசா சூரியகுமாரும் பெண் கௌரிநாயகியும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ, தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்துமூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(9094) தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

# சேதனப் பசளையைப் பயன்படுத்தி சிறந்த விளைச்சலைப் பெற வேண்டும்

## வட மாகாண விவசாயப் பணிப்பாளர்

(சாவகச்சேரி)

ஒவ்வொரு விவசாயியும் ஊட்டமேற்றப்பட்ட கூட்டெரு அல்லது சேதனப் பசளையைப் பயன்படுத்தி காலபோக நெற்செய்கையில் சிறந்த விளைச்சலைப் பெற வேண்டும் என வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சி- சரசாலைப் பகுதியில் இடம்பெற்ற விவசாயிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் இம்முறை காலபோக நெற் செய்கையில் இரண்டு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். ஒன்று இரசாயனப் பசளைகள் இல்லாத நிலைமையில் நெற்செய்கையில் ஈடுபடுகிறோம்.

மற்றையது பீடை நாசினிகள் இல்லாத நிலையில் நெல் உற்பத்தி செய்ய வேண்டிய நிலை. எனவே விவசாயிகள் இரசாயனப் பசளைப் பயன்பாடு இல்லாத நிலையில் குப்பைகளை ஊட்டமேற்றிய கூட்டெருவாக அல்லது சேதனப் பசளையாக மாற்றவேண்டியது அவசியம்.

தாவர மற்றும் கழிவுகளை சிறு துண்டுகளாக வெட்டி கூட்டெரு தயாரிப்பதன் மூலம் விரைவாகக் கழிவுகள் உக்கலடையும்.இதனூடாக வெற்றிகரமான முறையில் நெல் மற்றும் ஏனைய பயிர்ச்செய்கைகளை முன்னெடுக்க முடியும். அதேவேளையில் களைநாசினி கிடைக்காத பட்சத்தில் எவ்வாறு செய்கை மேற்கொள்வது என்பது பற்றியும் விவசாயிகள் அறிந்திருக்க வேண்டும்.

நெற் பயிர் மற்றும் ஏனைய பயிர்களை வரிசையில் நாட்டும் போது வரிசைகளுக்கிடையே களைக்கட்டுப்பாட்டு கருவியைப் பயன்படுத்தி களைகளைக் கட்டுப்படுத்த முடியும்.

அத்துடன் கூட்டெருவினை பொலித்தீன் பைகளால் மூடி வைக்கும் போது வெப்பநிலை அதிகரித்து களை விதைகள் இறந்து போகும்.

எனவே நெற் பயிர்ச்செய்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளில் பங்குபற்றும் விவசாயிகள் ஏனைய விவசாயிகளுக்கு முன்னராக பயிர் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் அதனைப் பார்வையிட்டு ஏனைய விவசாயிகளும் பயனடைய முடியும். என மேலும் அவர்தெரிவித்திருந்தார்.(7-5-30)

# காடுகளை அழித்து காணிபிடிப்பதற்கு எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை

## கரைச்சி பிரதேச செயலாளர்

(கண்டாவளை)

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதியில் காடுகளை அழித்து காணிபிடிப்பதற்கான எந்தவித அனுமதிகளும் வழங்கப்படவில்லையென கரைச்சி பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிஊற்றுப் புலம் பகுதியில் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் இப்பகுதியில் உள்ள காடுகளை அழித்து காணிகளை அபகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன் தொடர்ச்சியாக கடந்த 28 ஆம்திகதி இரவு கனரக வாகனங்களைப் பயன்படுத்தி காடுகளை அழித்த சம்பவத்தை அவதானித்த சிலர் சம்பவ இடத்திற்குச்சென்று கேட்ட போது காடழிப்பில் ஈடுபட்ட வர்களால் குடும்பஸ்தர் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்தபிரதேசத்தில் சுமார் 60 ஏக்கருக்கும் மேற்பட்ட காடுகள் குறிப்பிட்ட ஒரு சிலரால் மாத்திரம் துப்புரவு செய்யப்பட்டிருப்பதாகப் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கரைச்சி பிரதேச செயலாளரைத் தொடர்பு கொண்டு வினவிய போது குறித்த பிரதேசத்தில் காடுகள் அழிக்கப்படுவதற்கு எந்தவிதமான அனுமதியும் வழங்கப்படவில்லை. இதுதொடர்பில் குறித்த பகுதிக்குப் பொறுப்பான கிராம அலுவலரை நேரில் சென்று பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனவே குறித்த பிரதேசத்தில் இடம்பெறும் காடழிப்பு தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த மார்ச்மாதம் 21 ஆம் திகதி இவர்கள் கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் பல்கலைக் கழகத்துக்கு முன்பாக உள்ள பொதுக்காணியொன்றை அடாத்தாக பிடிக்க முற்பட்ட சமயம் அறிவியல் நகர் பிரதேச மக்களால் துப்பரவுக்கு பயன்படுத்தப்பட்ட கனரக வாகனத்தை தீயிட்டுக் கொளுத்த முற்பட்டதுடன் பிரதேச மக்களால் விரட்டியடிக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (7-5-6-315)

# கோப்பாயில் கிளைமோர் குண்டு மீட்பு

(குப்பிழான்)

யாழ்.கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய்ப் பகுதியிலுள்ள காணி ஒன்றிலிருந்து கிளைமோர் குண்டொன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த காணியைத் துப்புரவு செய்ய முற்பட்டபோது இரும்பினாலான பொருளொன்றைகாணி உரிமையாளர் அவதானித்துள்ளார்.

உடனடியாக இதுதொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று ஆய்வு மேற் கொண்டனர். இதன்போது குறித்த குண்டு கிளைமோர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி சம்பவம் தொடர்பாக கோப்பாய்ப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7-5-18)

# தாயையும் மகனையும் தாக்கிவிட்டு வீட்டை சூறையாடிய கும்பல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-நாவற்குழி மேற்கு கைதடிப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு வேளையில் நுழைந்த இருவர் அடங்கிய குழுவொன்று தாய் மற்றும் மகனைக் கட்டி வைத்து தாக்கியதுடன் வீட்டில் இருந்த பொருட்களையும் திருடிச்சென்றுள் ளனர்.இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நள்ளிரவு வேளையில் நாய் குரைத்த போது 17 வயது மகன் கதவினைத் திறந்து வெளியே சென்றுள்ளார். இதன்போது மகனைப் பிடித்த இருவர் மகனை வீட்டிற்குள் இழுத்துச் சென்று கட்டிப் போட்டதுடன் வீட்டில் இருந்த தாயையும் கயிற்றால் கட்டி வைத்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான 55 வயதான தாய் மற்றும் 17 வயதான மகன் இருவரும் உடல் முழுவதும் அடிகாயங்களுக்கு உள்ளான நிலையில் நேற்றைய தினம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இரண்டாயிரம் ரூபாய் பணம் மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றையும் திருடிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. தாக்குதல் மற்றும் திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (7-5-30)



மகாத்மா காந்தியின் 153 ஆவது ஜெனன தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை நகரில் அமைந்துள்ள அவரின் சிலைக்கு நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினர் மற்றும் அறவழிப் போராட்டக் குழுவினர் இதில் பங்கு பற்றினர். (படம்- மகாலிங்கம்)

# திலீபன் வைத்தியசாலை கட்டடத்தினை சுகாதார நிலையமாக்க தீர்மானம்

(சாவகச்சேரி)

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) ஆழியவளை பகுதியில் அமைந்திருந்த திலீபன் வைத்தியசாலைக் கட்டடமானது போருக்கு பின்னதாக கைவிடப்பட்டிருந்த நிலையில், அதனைப் புனரமைத்து ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்க வைப்பதற்கு நேற்று முன்தினம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த கட்டடம் தற்போது கைவிடப்பட்ட நிலையில் இருக்கும்போது, அங்கு சமூக விரோத செயல்கள் இடம்பெற முயற்சிகள் இடம் பெறுவதாகவும், வைத்தியசாலையாக முன்னர் அறியப்பட்ட கட்டடத்தை மீளவும் இயங்க வைப்பதால் பலர் பயனடைவார்கள் எனவும் அப்பகுதிமக்கள் தமது கோரிக்கையை முன்வைத்தனர்.

இதனையடுத்து, குறித்த பகுதிக்கு நேயமாக விஜயத்தை மேற்கொண்ட அங்கஜன் இராமநாதன், வைத்தியசாலை கட்டடத்தை புனரமைத்து மீள இயங்க வைப்பதற்காக, வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு ஒதுக்கப்படும் 3 மில்லியன் ரூபாய் திட்டத்தில் 2.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டை வழங்க சிபாரிசு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-5-30)



வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவராக அண்மையில் தெரிவுசெய்யப்பட்ட செல்வேந்திராவினை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரான அங்கஜன் இராமநாதன் கடந்த வியாழக்கிழமை சந்தித்தார். வல்வெட்டித்துறை பகுதியின் அபிவிருத்திதொடர்பாக இச்சந்திப்பின்போது இருவரும் கலந்துரையாடினர். (படம்- மகாலிங்கம்)



# மறைந்தும் மறையாத சேவையாளர் செல்வி பாக்கியலக்சுமி மார்க்கண்டு அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகள்



## செல்வி பாக்கியலக்சுமி மார்க்கண்டு

(கோண்டாவில் இந்துக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர்)

**பிறப்பு: 25.03.1945** **மறைவு: 25.08.2021**

**கல்வி**

ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி
**யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி**
உயர்கல்வி (கலைப்பிரிவு)
**யா/ இராமநாதன் கல்லூரி**
பட்டப்படிப்பு
**பேராதனைப் பல்கலைக்கழகம் (கலைப்பட்டதாரி)**
பட்டப்பின் மேற்படிப்பு
**யாழ். பல்கலைக்கழகம் (கல்வியியல், இந்து நாகரிகம்)**

**சேவை**

ஆசிரிய சேவை
**திருகோணமலை இந்துக் கல்லூரி (1970-1977)**
**யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி (1977-1987)**

உப அதிபர்
**யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி (1987-1990)**

அதிபர் (தரம்-1)
**யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி (1990-2005)**

ஓய்வு பெற்றமை
**25.03.2005**

### மறைந்தும் மறையாத சேவையாளர்

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாக்கிற்கு அமைவாக தனது வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்த ஒருவர் தான் அமரர் பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்கள். குடும்பம், தொழில், சுற்றம் என எல்லாவகையிலும் தனது கடமையை மிகவும் அர்ப்பணிப்புடன் செய்தவர். குடும்பம் எனக் கொண்டால் தனது நலனை முன்னிலைப்படுத்தாது சகோதரர்கள், பெறாமக்கள், உறவினர்கள் என எல்லோருடைய நலனையும், தேவைகளையும் பூர்த்தி செய்வதில் முன்னின்று உழைத்தவர். அவரது ஆசிரியத் தொழில் மூலம் கோண்டாவில் கிராம மக்கள் பெற்ற சேவையை சொல்லி விளங்க வேண்டியதில்லை. 1977 தொடக்கம் கோண்டாவில் மக்களால் ஐயர் பாடசாலை என அழைக்கப்பட்ட யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகச் சேர்ந்து பகுதித் தலைவராக, உப அதிபராக, அதிபராக சேவை யாற்றினார்.

அமரர் அதிபராக கடமையேற்ற 1990ஆம் ஆண்டு போர்க்காலச் சூழல் நிலவிய காலமாகும். பாடசாலைகளில் வரவு ஒழுங்கின்மை, இடைவிலகல், உரிய நேரத்திற்கு முன் பாடசாலையை விட்டு வெளியேறல் போன்ற ஒழுங்கீனங்கள் இருந்தன. இவற்றையெல்லாம் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் சீர்படுத்தி திறமையாக வழிநடத்தினார். யாழ். மாவட்டத்தில் இடப்பெயர்வுகள் நடைபெற்றதால் தீவகம், வலிகாமம் வடக்கு போன்ற இடங்களில் இருந்து வந்த பல மாணவர்களைப் பாடசாலைக்கு உள்வாங்கி 1000 இற்கு மேற்பட்ட மாணவர்களை தளபாடப் பற்றாக்குறைக்கு மத்தியிலும் குறைந்த இடப்பரப்பிலும் வைத்து திறமையாக நிர்வகித்து அவர்களது கல்வி விருத்திக்கு வழிகாட்டினார். நொந்த உள்ளங்களை ஆற்றுப்படுத்தினார். இயற்கை அனர்த்த காலத்தில் நந்தாவில் சூழலில் உள்ள மக்களுக்கு அடைக்கலம் கொடுத்து கோண்டாவில் இளைஞர்களின் சுயமுயற்சி ஆற்றுப்படுத்தலுக்கும் ஒத்துழைப்பு வழங்கியவர். இப் பாடசாலை தற்போது கட்டடங்கள், நிலம் எனப் பல வளங்களுடன் கல்லூரியாக விளங்க மூலாதாரமாக செயலாற்றியவர் அமரர் பாக்கியலட்சுமி மார்க்கண்டு ஆவார்.

பணம் மட்டும் இருந்தால் வளங்கள் பெருகமாட்டாது. அதற்கான முயற்சிகளும், செயற்பாடுகளும் பொருத்தமானதாக முன்னெடுக்கப்பட வேண்டும். அந்தவகையில் பாடசாலை பல காணிகளைப் பெற பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பெருமுயற்சி செய்தவர். பாடசாலையை கல்லூரியாக்க பல்வேறு செயற்பாடுகளை முன்னின்று நடாத்தியவர். அதற்கான பலன்களைப் பெற்று பெருமிதம் கொண்டவர். ஆயிரம் பாடசாலைகள் செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலை உள்வாங்கப்பட்டு விஞ்ஞான உயர்கல்வியை ஆரம்பிக்க பக்க துணையாக உழைத்தவர்.

யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி பௌதீக வளங்களைப் பெற மட்டுமன்றி, மாணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மேம்பட்டு நற்பிரஜைகளாக வாழவும் அரச தொழில், தனியார் துறைகளில் மேன்நிலை அடையவும் வேண்டும் என்ற நோக்கில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் மட்டுமன்றி கல்விச் சுற்றுலா, கலை விழாக்கள் மைதானமின்றிய நிலையிலும் சிறந்த மெய்வல்லுநர் போட்டிகள் மென்பந்து துடுப்பாட்ட போட்டிகள், வலைப்பந்துப் போட்டிகள் என பல நிகழ்வுகளின் மூலம் மாணவர்களின் உடல் உள விருத்திக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் வழிவகுத்தார்.

சுயதொழில்கள்,விவசாயம் எனச் செயற்பட்டவர்களின் குடும்பங்களிலிருந்து வந்த மாணவர்களை வைத்தியர்களாக, பொறியியலாளராக, அரச பெரும் பதவி உத்தியோகத்தர்களாக, பல்வேறு திணைக்களங்களில் உத்தியோகத்தர்களாக ஆக்கிய பெருமை அவரைச் சாரும். பெண் பிள்ளைகளின் கல்வி சிறப்பானதாக இருக்க வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர். அவர்களை ஊக்குவித்து, ஆசிரியர்களின் துணை கொண்டு சிறந்த கல்விபெற வைத்து, பல மாணவிகள் பல்கலைக்கழகம் செல்லும் நிலைமையை ஏற்படுத்தினார்.

அமரர் அவர்கள் பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர்களையும் கல்விசாரா ஊழியர்களையும் நேசித்தவர். அவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி உதவுவதுடன் அவர்களின் வீடுகளில் நடைபெறும் தனிப்பட்ட விசேட நிகழ்வுகளுக்கும் சென்று வீட்டில் உள்ளவர்களுடன் உறவாடிச் செல்லும் பழக்கம் உள்ளவர். அதனால் எல்லோரும் "அன்னை" போல் அவரைப் போற்றி வந்தனர்.இச் செயற்பாடு அதிபர், ஆசிரியர்கள் ஒரே குழுமாகச் செயற்பட்டு பலரிடமும் நற்பெயர் பெறக் காரணமாகியது.

இதேபோல் தனது சுற்றத்தவர்களையும் நேசித்து, அவர்களின் சுக, துக்கங்களில் பங்கேற்று, நல்வழி காட்டியாக விளங்கினார். இவ்வாறு உற்றாரால், சுற்றத்தவர்களால் ஊர் மக்களால் போற்றப்பட்ட சாதனையாளர் அன்னையின் மறைவு பேரிழப்பாகும். உலக நியதிகளுக்கேற்ப மனத்தினைத் தேற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி! சாந்தி!!

***அஞ்சலி செலுத்துவோர், அன்னையின் காலத்து கோண்டாவில் இந்துக் கல்லூரிக் குடும்பம்***

**திரு. இ. அருணகிரிவாசன், திருமதி விகடம்ப மலர், திரு.ப.பாலமுகுந்தன், திருமதி ஜா. முத்துக்குமாரு, திருமதி வ. பரமேஸ்வரநாதன், திருமதி. ப.கணபதிப்பிள்ளை, செல்வி. வை வசந்தி, திருமதி.சு. சர்வகுணசீலன், திரு. இ.இராஜ்குமார், திருமதி கி.தயாபரன், திருமதி சி.தவதேவி, திருமதி சு.பாலபுத்திரன், திரு. இ. செந்தில்குமரன், திருமதி. ப. ரதிரஞ்சிதம், திருமதி வ. பிறைசூடி, திருமதி பா. ஜெயந்தி, திருமதி. நா. சண்முகரத்தினம், திருமதி க.பக்தராசா, திருமதி அ. சிவாகரன், திருமதி அ.சசிகலா, திரு. க. பத்மநாதன், செல்வி ஜெ. அனுசா, திரு.சி.சுரேஸ்நாதன், திருமதி ப.சந்திரகாசன், திரு. க.ஜெனகன், திருமதி செ.பராபரம், செல்வி. சி. சாரதா, திரு. அ.குணசேகரன்**

(9039)

# கொவிட் தாக்கமே சில பொருட்களின் விலை அதிகரிப்புக்கு காரணம்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்



(குருமண்காடு)

கொவிட் தாக்கமே சில பொருட்களின் விலை அதிகரிப்புக்கு காரணம் ஆகும். வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கிராமிய பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்வாதாரம் கட்டியெழுப்பப்படும் என இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தாக்கம் தான் சில பொருட்களின் விலை அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளது. கொவிட் தாக்கம் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலேயே சவாலாக உள்ளது. ஆனால் நாங்கள் வளர்முக நாடு. இங்கு 75 வீதத்திற்கு மேல் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. டிசம்பர் மாதம் வரும் போது இது முழுமை பெறும் நிச்சயமாக கொவிட் தொற்றில் இருந்து மேலே வர முடியும். அதன்போது மக்கள் தற்போது எதிர்நோக்கும் சில பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

கிராம மட்டங்களில் இருந்து கிராமிய பொருளாதாரத்தையும், மக்களின் வாழ்வாதாரத்தையும் கட்டியெழுப்புவதற்குமே அதிக நிதி ஒதுக்கப்படவுள்ளது. விவசாயம், மீன்பிடி, கால்நடை, சிறுபொருளாதார பயிர்செய்கை மேம்பாடு போன்ற விடயங்களுக்கே அதிக நிதி ஒதுக்கப்படவுள்ளது.

மேலும், அதிபர், ஆசிரியர்களுடைய சம்பளப் பிரச்சனை மற்றும் அவர்களுடைய கோரிக்கைகளை அரசாங்கம் புறம் தள்ளவில்லை. தற்போதைய இக்கட்டான நிலையில் பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் இவர்களுடைய பிரச்சனையை அணுகுவது சவாலான விடயம். இருந்தாலும் அவர்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது.

தற்போது அரசாங்கம் மீது குற்றம் சாட்டும் எதிர்கட்சியினரின் கடந்த நான்கரை வருட கால ஆட்சியில் இந்த நாட்டின் பொருளாதாரத்தை அழிந்தவர்கள்.

அப்போது வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி சார்ந்து எந்த முன்னேற்றமும் இல்லை. மக்களுக்கு இருந்த நீண்ட கால பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை. அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக இருந்தும் எதுவும் நடைபெறவில்லை. எதிர் கட்சியினர் அரசாங்கத்தை விமர்சிக்கிறார்கள். தடுப்பூசி கொண்டு வராத போது அதனை விமர்சித்தார்கள். கொண்டு வந்து தடுப்பூசி வழங்கும் போது அதனை விமர்சிக்கிறார்கள்.

கொவிட் தொற்றில் இருந்து நாடு மீண்ட பின் பல ஆக்கப்பூர்வமான விடயங்களை அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கலாம் எனத் தெரிவித்தார். (7-5-6-250)

# நிவாரணப் பொருட்கள் வழங்கி வைப்பு




(கண்டாவளை)

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அடிப்படையில் விடுதலையான முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகள் மற்றும் மன்னாரில் உள்ள ஏனைய தேவையுள்ள குடும்பங்களுக்கு படையினரால் நிவாரணப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

வன்னிப் பாதுகாப்புப் படைத் தலைமையகத் தளபதியாக விருந்து வெளியேறவிருக்கும் மேஜர் ஜெனரல் ஹேமந்த பண்டாராவினால் மன்னாரில் உள்ள 54 ஆவது படைப்பிரிவு தலைமையகத்திற்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்த வேளையில் மாலபே SLIT நிறுவனத்தின் இரண்டாம் வருட மாணவர்களால் வழங்கப்பட்ட நிதி உதவியைக் கொண்டு முன்னாள் விடுதலை புலிகள் அமைப்பின் போராளிகள் மற்றும் மன்னாரில் உள்ள ஏனைய தேவையுள்ள தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கும் குறித்த நிவாரண பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7-5-6-315)

# புதையல் தோண்ட முற்பட்டவர்கள் மீது பளை பொலிஸாரிடம் முறைப்பாடு



(தர்மபுரம்)

கிளிநொச்சிமாவட்டப்பளை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட கச்சார் வெளிபகுதியில்நேற்று முன்தினம் சந்தேக நபர்கள் சிலரால் புதையல் தோண்டப்படுவதாகப் பளை பொலிஸாருக்கு முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பளை பொலிஸார் புதையல் தோண்டப்பட்ட இடத்தை பார்வையிட்டனர். குறித்த இடத்தில் தோண்டப்பட்ட குழி ஒன்றும் காணப் பட்டுள்ளது.

இதுவரையில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (7-5-6-316)

# குளவிக்கொட்டுக்கு இலக்கு

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் நேற்றைய தினம் வீதியால் பயணித்தவர்களுக்கு தென்னை மரத்தில் இருந்து கலைந்த பெருங் குளவிகள் வீதியால் பயணித்த இருவரை தாக்கியுள்ளது.

இருவரும் சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இக் குளவிக்கூட்டினை கிராம உத்தியோகத்தர் மூலம் அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-5-6-316)

# உடலங்களை பாதுகாக்க பிணவறையாக மாற்றப்பட்ட இரும்பு கொள்கலன்

(கண்டாவளை )

கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலையில் நிலவிய குளிரூட்டல் வசதி கொண்ட பிணவறைப் பற்றாக்குறையையடுத்து 20 அடிநீளமான இரும்பு கொள்கலன் ஒன்று கிளிநொச்சிமுன்னரங்கு பாதுகாப்பு பராமரிப்பு பகுதிப் படை சிப்பாய்களால் பிணவறையாக மாற்றியமைக்கப்பட்டு வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிமாவட்ட பொது வைத்தியசாலையில் ஒரு சமயத்தில் 06 தொடக்கம் 07 வரையான உடலங்களை பேணுவதற்கான வசதிகளே காணப்படுவதனால் கொவிட் மரணங்கள் அதிகரிப்பு மற்றும் மாவட்டத்தில் மின்தகன வசதிகள் இன்மை எரியூட்டுவதில் கால தாமதங்கள் ஏற்படுதல் என்பவற்றால் மரணித்தவர்களின் உடலங்கள் தேக்கமடைவது தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்ததையடுத்து இறந்தவர்களின் உடலங்களைக் குளிரூட்டிப் பேணுவதற்குரிய கொள்கலனை மாவட்டச் செயலாளர் ஏற்படுத்திக் கொடுத்திருந்த நிலையில் அதனை பொறுப்பேற்று முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் சிசிர பிலபிட்டியவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி முன்னரங்கு பாதுகாப்புப் பராமரிப்பு பகுதி படைச் சிப்பாய்களால் பிணவறையாக மாற்றியமைக்கப்பட்டு வைத்தியசாலை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

11 சடலங்களை சேமிக்க கூடிய வகையில் கொள்கலன்களை பிணவறைகளாக மாற்றியமைத்து வைத்தியசாலை நிர்வாகத்திடம் படையினரால் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-5-6-315)

# வாள்வெட்டில் நால்வர் காயம்

(நெளுக்குளம்)

வவுனியா கோவில்குளம் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவில் இளைஞர்குழு ஒன்று, வீதியால் செல்பவர்களை வழிமறித்து வாள் மற்றும் கோடரிகளால் தாக்கியதில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் வீடுகள் சிலவற்றிற்குள் புகுந்து உறங்கி கொண்டிருந்தவர்களையும் தாக்கியுள்ளனர். இதனால் பெண் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் இருவர்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(7-5-6-299)

# இராசிபலன்

04.10.2021
புரட்டாதி 18, திங்கட்கிழமை
திரயோதசி முன்னிரவு 8.07 மணிவரை
பூரம் பின்னிரவு 2.40 மணிவரை
சுபநேரம் -12.02- 1.32 மணிவரை
இராகு காலம் -7.32-9.02 மணிவரை
சந்திராஷ்டமம்- அவிட்டம்
பிரதோச விரதம் வள்ளுவன்


மேஷம்

தொட்ட காரியங்கள் முன்னேற்றம் காணும் நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், வழிபாடு ஆனந்தம் தரும், பிறர் உதவியுண்டு.


ரிஷபம்

சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


மிதுனம்

உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.


கடகம்

பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.


சிம்மம்

குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


கன்னி

விரதங்களில் நம்பிக்கை கூடும், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சஞ்சலங்கள் சற்று கூடும் நாள்.


துலாம்

ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் நிறைவேறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.


தனுசு

வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


மகரம்

உடல்ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், கௌரவக்குறைவுகள் ஏற்படலாம்.


கும்பம்

குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.


மீனம்

உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

நமக்கு வேண்டிய அனைத்தையும் கடவுள் கொடுத்திருக்கின்றார்.

**குணமடைவு 652**

(கொழும்பு)
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 652 பேர் பூரண குணமடைந்து நேற்று வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.
இதனையடுத்து, கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 59 ஆயிரத்து 298 ஆக அதிகரித்துள்ளது. (4-5)

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் பகிரங்க ஏலவிற்பனை

யாழ் மாநகரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் விற்பனை என காட்டப்பட்ட பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 2021.10.21 ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை 11.00 மணிக்கு மாநகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது. பொருட்களை பார்வையிட விரும்புவோர் அன்றைய தினமே ( 2021.10.21) மு.ப 8.30 தொடக்கம் மு.ப 10.30 மணிவரை பொருட்களைப் பார்வையிட்டு ஏலத்தில் பங்குபெற விரும்பின் மீளளிக்கப்படாத வைப்புத்தொகையாக ரூபா 500/= னை செலுத்தி ஏலத்தில் பங்குபற்ற முடியும்.

முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி-2731)

# கேள்வி அறிவித்தல்

## கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு நிதி - 2021
## உள்ளூராட்சி திணைக்களம்
## கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி

1. கரைச்சி பிரதேச சபையின் SMRSSII நிதியின் கீழ் குறித்த வேலைத் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2. தவிசாளர், கரைச்சிபிரதேசசபை, கிளிநொச்சி சார்பாக தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

3. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்விகோரப்படுகின்றது.

4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு,வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும்,அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் சீடா(CIDA) பதிவினை மேற்கொண்டவராகவும் ,இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள்,கேள்வி ஆவணம் பகுதி 4,ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule 5) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கரைச்சிபிரதேச சபை, கிளிநொச்சி.(தொலைபேசி 0212285761, தொலைநகல்: 0212285690,E-Mail: kilinochchi1kps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை 18.10.2021 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தவிசாளர்,கரைச்சிபிரதேசசபை,கிளிநொச்சிஎனும் இடத்திலிருந்து 04.10.2021 ஆம் திகதியிலிருந்து 18.10.2021 ஆம்திகதி வரைஅலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/- (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

7. ஆர்வமுள்ள கேள்வி தாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர்,கரைச்சிபிரதேசசபை, A9 வீதிகிளிநொச்சிஎனும் முகவரிக்கு 18.10.2021 ஆம் திகதிமாலை 14.30 மணிக்குமுன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப் படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது,கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63நாட்கள் (அறுபத்து மூன்று நாட்கள் - 20.12.2021) வரையும் செல்லுபடியாகும்.

9. குறித்தபெறுகை 03/2020(i) ,04/2016 (iii) இலக்க 11.01.2021 , 18.02.2021 ஆம் திகதிய பொது நிதி சுற்று நிருபத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

10. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்விஇலக்கம் | வேலை விபரம் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ)மில்லியன் (With out Vat) | ஒப்பந்தகாலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: பிணைவைப்பு (ரூபா) | வேண்டப்படும் கேள்விப் பிணை: செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| NP/KI/KAPS/SMRSSII/01/2021 | பரந்தன் இளைஞர் விளையாட்டு மைதானத்திருத்தம் | 4.55 | 90 நாட்கள் | C8,C7 | 45,500.00 | 16.01.2022 |

கேள்விக்கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 11.10.2021 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தவிசாளர்,கரைச்சி பிரதேச சபை,கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

04.10.2021 (சி-2734) தவிசாளர், கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி

# பாரதம்



காந்திஜெயந்தியை முன்னிட்டு, உலகின் மிக உயரமான கட்டடமான புர்ஜ் கலிபா கட்டடத்தில் மஹாத்மா காந்தியின் புகைப்படம் ஒளிவிளக்குகளால் மிளிர்ந்தது.

## பிரேசில் ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம்

(பிரசிலியா)

பிரேசில் ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந் நாட்டில் பல்லாயிரக்கணக் கான மக்கள் ஆர்ப்பாட்ட ங்களை முன்னெடுத்துள்ள னர்.

பிரேசிலில் அடுத்த ஆண்டு முக்கியத் தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ள நிலையில் இந்த ஆர்ப்பாட்டங்கள் வலுப் பெற்றுள்ளன.

கொரோனாப் பரவல் நிலை யை தற்போதைய ஜனாதிபதி கையாண்ட விதம் குறித்து மக்கள் அதிருப்தியில் உள்ள நிலையில் கருத்துக் கணிப்பின் அடிப்படையில் அவர் பின்னடைவைச் சந்தித்திருப்பதாகத் தெரிவிக்க ப்படுகின்றது.

அத்துடன் கொரோனாத் தொற்று காரணமாக 6 இல ட்சம் பேர் மரணித்ததாக வும் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டுள்ள மக்கள் தெரிவிக்கி ன்றனர்.

நேற்றுமுன்தினம் 160 இற்கும் மேற்பட்ட நகரங் களில் ஆர்ப்பாட்டங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (7-5)

## இலங்கையில் ...

## இந்திய ஆதரவுடன் செய...

## பணிகள் ஆமை வேகத்தில்...

(சென்னை)

**இலங்கை வரைபடத்துக்கு வெளியே ஒரு தனி நிலப்பரப்... சீனாவின் திட்டத்தை இலங்கை அரசோ, அந்நிய நேரடி... ஈர்ப்பதற்கான சிறப்பு பொருளாதார மண்டல திட்டம் என்கிற... சீனாவின் இந்த நடவடிக்கை, தமிழகத்தின் பாதுகாப்புக்கு ஆப... கருதப்படுகின்றது.**

இலங்கையில் சீன ஆதிக் கத்தை கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு முயற் சிகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. இந்திய பெருங்கடல் பகுதி யில் ஆதிக்கம் செலுத்த, நம் அண்டை நாடான சீனா தொடர் ந்து முயற்சித்து வருகிறது.

2017 இல் அம்பாந்தோட்டை துறை முகத்தைச் சீன நிறுவனத் துக்கு 99 ஆண்டு குத்தகைக்கு இலங்கை வழங் கியுள்ளது. இது, இந்தியாவுக்கு அதிர்ச் சியை ஏற்படுத்தியது. இலங்கையில் பல வளர்ச்சிதிட்டங்களில் இந்தியா முதலீடு செய்துள்ளது. இந்திய ஆதரவுடன் செயற்படுத்தப்படும் திட்டங்களின் பணிகள் ஆமை வேகத்தில் நடக்கின் றன. இவை, இந்தியாவுக்கு அதிருப் தியை ஏற்படுத்தியுள்ளன.

இதற்கிடையில் கொழும்பு துறைமுகம் அருகே, 10 ஆயி ரத்து 39கோடி ரூபாய் செலவில் துறைமுக நகரம் ஒன்றை சீனா உருவாக்கி வருகிறது. கடலில் மண்ணை கொட்டி மேடாக்கி செயற்கை தீவாக இது உருவாக்கப்படுகிறது.

இலங்கை துறைமுக ஆணை... யம் கொழும்பு துறைமுகத்தி... புதிய முனையம் கட்டும் ஒப்... தத்தை, இந்தியாவின் அதா... குழுமத்துடன் செய்துள்ளது... இந்த ஒப்பந்தத்தின் மதிப்... 5,250 கோடி ரூபாய். இந்நிலை... யில் பிரதமர் மோடியை, தே... யப் பாதுகாப்பு ஆலோசகர் அஜி... தோவல், வெளியுறவு செயல... ஷ்ரிங்களா ஆகியோர் கடந்த...

## பிரான்ஸை சமாதானப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா செல்லும் அதிகாரிகள்

(பாரிஸ்)

கடந்த மாதம் வோஷிங்டன் மற்றும் லண்டனுடனான உட ன்படிக்கைக்கு ஆதரவாக அவு ஸ்ரேலியா பிரெஞ்சு நீர்மூழ்கிக் கப்பல் ஒப்பந்தத்தை இரத்து செய்ததை அடுத்து அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் இடையே யான உறவுகள் வலுவிழந்தது.

இந்நிலையில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன் டனி பிளிங்கன் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இன்று திங்கட்கிழமை பிரான்ஸிற்கு செல்லத் திட்டமிட்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது பொருளாதார ஒத்துழைப்பு தொட ர்பான கூட்டத்திற்கு தலைமை தாங்குவதுடன் பிரெஞ்சு அதி காரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என இராஜாங்க அமைச்சின் ஊடகப்பேச்சாளர் கூறியுள்ளார்.

கடந்த செப்டெம்பர் 15 ஆம் திகதி அமெரிக்கா, பிரித்தா னியா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் இந்தோ-பசிபிக் பிராந் தியத்திற்கான ஒரு புதிய பாது காப்பு உடன்பாட்டைச் செய்து கொண்டன.

இந்த ஒப்பந்தம் காரணமாக பிரான்ஸிடமிருந்து நீர் மூழ்கிக் கப்பல்களை வாங்குவதற்கான 40 பில்லியன் டொலர் மதிப்பு ள்ள உடன்படிக்கையை அவுஸ் ரேலியா இரத்து செய்தது.

இந்த நடவடிக்கை முதுகில் குத்தும் செயற்பாடு என பிரான்ஸ் கடுமையாக விமர்சி த்திருந்தது.

இந்நிலையில் இரு நாடுக ளின் உறவுகள் குறித்து ஆழ மான ஆலோசனைகள் நடத்தப் படும் என பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுட னான தொலைபேசி அழைப் பில் ஜனாதிபதி ஜோ பிடன் உறுதியளித்திருந்தார். (7-5)

## மன்னராட்சி நடை... முதன் முறையாகப்...

(தோகா)

மன்னராட்சி நடைமுறை யில் இருக்கும் நாடுகளில் மத் திய கிழக்கு நாடான கட்டா ரும் ஒன்று. அரசை வழி நடத்துவ தில் அந்த நாட்டின் மன்னருக்கு அறிவுரை வழ ங்கும் பொருட்டு கடந்த 1972 ஆம் ஆண்டு சட்ட மன்ற அமைப்பு உருவாக்கப்பட் டது.

ஷீரா என்று அழைக்கப்ப டும் நாட்டின் உச்ச அதிகாரம் படைத்த இந்த சபையின் 45 உறுப் பினர்களை ஆட்சி பொறுப்பில் இருக் கும் மன்னரே நேரடியாக நியமனம் செய்து வந்தார்.

கட்டாரின் மன்னராகக் கட ந்த 2013 ஆம் ஆண்டு பொறுப் பேற்ற ஷேக் தமீம் ஜனநாயக தன்மை, தொழிலாளர் உரிமை, பெண்கள் பிரதிநிதித்துவம் என பல தளங் களில் பல்வேறு மாற்றங்களை முன்னெடுத்தார்.

இதற்கிடையில் கடந்த 2017 ஆம் ஆண்டு கட்டார் பயங்கர வாதத்தை ஊக்குவிப்பதாகக்கூறிஅதன் அண்டை நாடுகளான சவுதி அரேபியா, எகிப்து,

## வெற்றிகரமாக கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா மருந்து வில்லை

(வோஷிங்டன்)

"கொவிட் 19" வைரஸால் பாதிக்கப்பட்டவர்களை விரை வாகக் குணப்படுத்துவதில் அமெரிக்க மருந்து நிறுவன மான 'மெர்க்' தயாரித்த "மோல்னு பிரேவிர்" மாத்திரை வெற்றிகர மான முடிவுகளைக் காட்டுவ தாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா உட்பட மேற் கத்திய நாடுகள், கொவிட் 19 நோயாளிகளை குணப்படுத்த பல மருந்துகளை இதுவரை உருவாக்கியுள்ளன.

இருப்பினும், அந்த மருந்து கள், கொரோனாத் தொற்றுக் குள்ளான தீவிர நோய்கள் உள்ள நோயாளிகளுக்கு மருத்துவ மேற்பார்வையின் கீழ் வைத்தி யசாலையில் வைத்து மட்டுமே வழங்கப்படுகின்றன.

எனினும், "மோல்னுபிரேவிர்" மாத்திரை அவ்வளவு ஆபத்தானது அல்ல என்றும் மருத்துவரின் பரிந்து ரைப்படி வீட்டிலேயே பயன்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


மூன்றாம் கட்ட மருத்துவ பரிசோ தனைகள் ஏற்கனவே முடிந்துவிட்ட தால், அமெரிக்க உணவு மற்றும்

# ் சீன ஆதிக்கம்

# சயற்படுத்தப்படும் திட்டப்

# ில்; அதிருப்தியில் இந்தியா

ரப்பை உருவாக்கும் நரடி முதலீடுகளை ன்கிறது. இதற்கான ் ஆபத்தானது எனக்



க ஆணை முகத்தில் டும் ஒப்பந ன் அதானி துள்ளது. ன் மதிப்பு இந்நிலை யை, தேசி சகர் அஜித் பு செயலர் ர் கடந்த 2 ஆம் திகதி சந்தித்து இலங்கை நிலவரம் பற்றி ஆலோசித்தனர்.

"தமிழகத்தின் பாதுகாப்பு தான் முக்கியம்" என அவர்க ளிடம் தெரிவித்த பிரதமர், அதை வலுப்படுத்தும் வகையில் நடவ டிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். தமி ழகப் பாதுகாப்புக்காக இலங்கை யில் இந்தியா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து தமிழக முதல்வர் ஸ்டாலினு க்கு, தேசிய பாது காப்பு ஆலோ சகர் கடிதம் எழுதுவார் என, மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. கூட்டு இராணுவப் பயிற்சி பற்றி இராணுவ அமை ச்சக வட்டாரங்கள் தெரிவித்ததா வது, இந்தியா - இலங்கை இராணுவ வீரர்கள் இணை ந்து, "மித்ர சக்தி" என்ற பெயரில் கூட்டு பயிற்சியில் இதுவரை ஏழு முறை ஈடுபட்டுள்ளனர். எட்டா வது முறையாக இந்த கூட்டு இராணுவப் பயிற்சி இலங்கையில் இன்று தொடங்கி 15ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. பயங் கரவாத அச்சுறுத்தல்களை எதிர் கொள்வது, முறியடிப்பது தான் இந்த பயிற்சியின் முக்கிய நோக் கமாக இருக்கும். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (7-5)

## வரலாற்றில் இன்று...

- 1537 - மத்தியூ பைபிள் எனப்படும் முதலாவது முழுமை யான ஆங்கில விவிலிய நூல் அச்சிடப்பட்டமை.
- 1824 - மெக்சிகோ குடியரசு ஆகியமை.
- 1830 - பெல்ஜியம் நெதர்லாந்து நாட்டில் இருந்து பிரிந்து தனிநாடாகியமை.
- 1918 - நியூ ஜேர்சியில் ஷெல் கம்பனியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு விபத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டமை.
- 1943 - இரண்டாம் உலகப் போரில் ஐக்கிய அமெரிக்கா சொலமன் தீவுகளைக் கைப்பற்றியமை.
- 1957 - பண்டா -செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக கண்டிக்கு நடைப்பயணம் மேற்கொண்டமை.
- 1957 - முதலாவது செயற்கைச் செய்மதி ஸ்புட்னிக் 1 புவியைச் சுற்றி வர விண்ணுக்கு அனுப்பப்பட்டமை.
- 1958 - பிரான்சின் ஐந்தாவது குடியரசு அமைக்கப்பட்டமை.
- 1966 - பசுட்டோலாந்து ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்று லெசோத்தோ எனப் பெயர் மாற்றம் பெற்றமை.
- 1992 - மொசாம்பிக்கின் 16 ஆண்டு கால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தமை.
- 1997 - ஐக்கிய அமெரிக்காவின் வரலாற்றில் இரண்டாவது மிகப் பெரிய வங்கிக் கொள்ளை வட கரொலைனாவில் இடம்பெற்றமை. 17.3 மில்லியன் அமெரிக்க டொலர் பணம் கொள்ளையடிக்கப்பட்டது. இவற்றில் 95 விழுக்காடு பணம் திரும்பப் பெறப்பட்டமை.
- 2001 - சைபீரியாவில் விமானம் ஒன்றை உக்ரைனின் ஏவுகணை தாக்கியதில் விமானம் கருங் கடலில் வீழ்ந்து 78 பேர் கொல்லப்பட்டமை.
- 1884 - சுப்பிரமணிய சிவா, (இந்திய விடுதலைப் போராட்ட வீரர்) ஜனன தினம்.
- 1904- திருப்பூர் குமரன், (இந்திய விடுதலைப் போராட்ட தியாகி) ஜனன தினம்.
- 1669 - ரெம்பிரான்ட், (டச்சு ஓவியர்) நினைவு தினம்.
- 1947 - மாக்ஸ் பிளாங்க், (நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர்) நினைவு தினம்.
- 2000 - மைக்கல் ஸ்மித், (நோபல் பரிசு பெற்றவர்) நினைவு தினம்.
- உலக வன விலங்குகள் நாள்
- உலக விண்வெளி வாரம் ஆரம்பம். (7-5)

# டபெறும் கட்டாரில் கப் பொதுத் தேர்தல்

**ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பக்ரைன் போன்ற நாடுகள் கட்டாரின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தன.**

**இந்த சூழலில் கடந்த ஆண்டு நவம்பர் ஷூரா சபையின் 49 ஆவது ஆண்டு கூட்டத்தைத் தொடக்கி வைத்து பேசிய மன்னர் ஷேக் தமிம் 2021 ஆம் ஒக்டோபர் மாதம் ஷூராச் சபைக்கான முதல் பொதுத் தேர்தல் நடைபெறும் என அதிரடியாக அறிவித்தார்.**

**அதோடு இந்த தேர்தலை வழி நடத்த சிறப்புத் தேர்தல் குழு ஒன்றையும் அவர் அறிவித்தார்.**

**இந்த நிலையில் கட்டாரில் நேற்று முன்தினம் முதன் முறையாக பொதுத் தேர்தல் நடைபெற்றது.**

**30 உறுப்பினர்களின் பதவிக்கு மொத்தம் 284 பேர் போட்டியினர்.**

**நாட்டில் நடைபெறும் முதல் பொதுத்தேர்தல் என்பதால் கட்டார் மக்கள் ஆர்வத்துடன் தங்களின் ஜனநாயகக் கடைமையை ஆற்றினர். (7-4)**

# தலிபான்கள் நியமித்த தூதர் நவம்பரில் ஐ.நா. பரிசீலனை

(காபுல்)

தலிபான்கள் நியமித்த சுஹைல் ஷாஹீனை ஐ.நா. வின் ஆப்கான் தூதராக ஏற்பது குறித்து ஐ.நா. பொதுச் சபை சீராய்வுக் குழு அடுத்த மாதம் பரிசீலிக்கவிருக்கிறது.

இது குறித்து 76 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தின் தலைவர் அப்துல்லா ஷஹீத் செய்தியாளர்களிடம் கூறிய தாவது,

இந்த விவகாரம் ஐ.நா. பொது சபை உறுப்பு நாடுகளின் பிரதி நிதிகளின் தகுதியை ஆய்வு செய்யும் பொதுச் சபை சீராய்வுக் குழுவின் பார்வைக்கு அனுப்ப ட்டதாக அதிகாரிகள் தெரிவித்தி ருந்தனர்.

மேலும், பொதுச்சபைக் கூட்ட த்தில் தலிபான்கள் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தகவல்கள் தெரிவித்தன.

இந்த விவகாரத்தில் முடிவெ டுக்க வேண்டிய பொதுச் சபை சீராய்வுக் குழுவில் அமெரிக்கா, ரஷியா, சீனா, பஹாமாஸ், பூடான், சிலி, நமீபியா, சியாரா லியோன், ஸ்வீடன் ஆகிய நாடுகள் உறுப் பினர்களாக உள்ளன.

இந்த விவகாரத்தில் உடனடி முடிவெடுக்க அமெரிக்கா விரும் பாததால், பொதுச் சபைக் கூட்ட த்தில் தலிபான்கள் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் கூறப்பட்டது.

எனினும், தலிபான்களை திருப்திப்படுத்தும் வகையில் முந்தைய அரசால் நியமிக்கப் பட்ட ஆப்கான் தூதர் குலாம் ஐசக்ஸாயும் கூட்டத்தில் பேச அனுமதிக்கப்படவில்லை.

இந்த நிலையில், 76 ஆவது பொதுசபைக்கூட்டத்தின் தலைவர் அப்துல்லா ஷஹீத் செய்தியாளா ர்களை கடந்த வெள்ளிக்கிழமை முதன்முறையாக சந்தித்தார்.

அப்போது, தலிபான்கள் நிய மித்துள்ள தூதர் குறித்து செய் தியாளர்கள் கேட்டதற்கு அவர் இவ்வாறு பதிலளித்தார். (7-5)

மருந்து நிர்வாகத்திடம் மருந்தைப் பய ன்படுத்த அனுமதிகோரி மெர்க் நிறுவ னம் அனைத்து தரவுகளையும் சமர்ப் பித்துள்ளது. அடுத்த இரண்டு வாரங்க ளுக்குள் மோல்னுபிரேவிர் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுவதாக அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் அறிக்கை யொன்றில் குறிப்பிட்டுள்ளது. (7-5)

## அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டுடெர்டே

(மணிலா)

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகோ டுடெர்டே அடுத்த ஆண்டு தேர்தலில் துணை ஜனாதிபதி பதவிக்கு போட்டி யிடப் போவதில்லை என்றும் பதவிக்காலம் முடிந்த பிறகு அரசியலில் இருந்து ஓய்வு பெற வுள்ளதாகவும் அறிவித்துள் ளார்.

இந் நிலையில் 76 வயதான டெர்டே, 2022 தேர்தலில் துணை ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடப் போவதாக கடந்த மாதம் கூறினார்.

இந் நிலையில் நேற்று மேற் கண்ட முடிவினை அறிவித்து ள்ளார்.

டுடெர்டே ஒரு சர்ச்சைக் குரிய வலிமையான ஜனாதிபதி ஆவார்.

2016 இல் அதிகாரத்துக்கு வந்ததிலிருந்து குற்றங்களைக் குறைப்பதாகவும் நாட்டின் போதைப் பொருள் நெருக்க டியை சரிசெய்வதாகவும் உறுதி யளித்தார்.

ஆனால் அவரது ஐந்து வருட ஆட்சியில் போதைப் பொருளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக ளுக்காக ஆயிரக்கணக்கான சட்டவிரோத கொலைகள் இடம்பெற்றுள்ளதாக விமர்சிக் கப்படுகிறது. (7-5)

# குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துவதை ஊக்கப்படுத்துங்கள்

## வைத்தியர் தீபால் பெரேரா கோரிக்கை

(கொழும்பு)

அனைத்து பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துவதை ஊக்கப்படுத்துமாறு குழந்தைகளுக்கான லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தை நல வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.



நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 83 வீதமானவர்களுக்கு தடுப்புசி செலுத்த அரசு திட்டமிட்டுள்ளது.12 முதல் 19 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்காக பைசர் தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், தங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துவதை ஊக்கப்படுத்துமாறு அனைத்து பெற்றோர்களுக்கும் கோரிக்கை விடுத்துள்ளார். (4-5)

# ரஞ்சனை விடுவிக்கக் கோரி ஆளுங்கட்சிக்குள் இருந்து குரல்

(கொழும்பு)

கடூழியச்சிறைத் தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொது மன்னிப்பு அளிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றினையும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

சிறைச்சாலைகள் தினத்தை முன்னிட்டு, பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் இவரது விடுதலை குறிந்து கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5)

# வானிலிருந்து வீழ்ந்த மர்மப் பொருள்

(கொழும்பு)

இலங்கையின் சில பகுதிகளில் வானிலிருந்து மர்ம பொருள் வந்துள்ளதாக நேரில் பார்த்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

தெஹிஅத்தகண்டிய, கிராதுருகோட்டை மற்றும் அம்பாறை பிரதேசங்களில் சில நந்தி கூடுகள் போன்ற பொருள் ஒன்று நேற்று காலை வானில் பறந்து வந்ததாகப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். அவற்றில் சில பகுதிகள் தரையில் விழுந்துள்ளதாகப் பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது நூல் போன்ற ஒன்று வானில் இருந்து விழுந்தது.

பிரதேசம் முழுவதும் வெள்ளையாகப் படர்ந்தது. வெயில் பட்டவுடன் அவை மாயமாகி விட்டது.

சிறிது நேரத்தில் விமானம் ஒன்று அந்த பகுதிகளில் பறந்ததனை அவதானித்தோம். அதில் புகை போன்று வெளியேறியது எனினும் சற்று நேரத்தில் விமானம் மறைந்து விட்டது என தெரிவித்தார். (4-5)

# தடுப்பூசி பெற்றவர்கள் மட்டுமே திருமண மண்டபத்திற்குள் நுழையலாம்?

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் திருமண நிகழ்வு மண்டபங்களுக்குள் நுழைய, இரண்டு தடுப்பூசிகளையும் பெறாத நபர்களுக்கு அனுமதி மறுக்கப்படலாம் என திருமண சேவைகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 50 விருந்தினர்களுடன் திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கு சுகாதார பிரிவு அனுமதி வழங்கியுள்ளது.

சுகாதார அமைச்சின் அனுமதியை முன்னெடுத்துச் செல்வதற்கும், சந்தர்ப்பத்தை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு சங்கத்தின் அதிகாரிகள் ஹோட்டல் உட்பட அனைத்து தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தடுப்புசிகளை நிராகரிக்கும் 20, 30 வயதிற்குட்பட்டவர்களுக்கு இந்தக் கட்டுப்பாடு பாதிப்பை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-5)




அத்வைதா | ரம்மியா | சுவஸ்திகன்










அலெக்ஸ் | சாயிஷன் | விவேக்கா









நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பட்ஜெட்டுக்கான யோசனையை

## கிராமிய மட்டத்திலிருந்து பெற தீர்மானம்

**(கொழும்பு)**

**நாட்டில் முதற் தடவையாகப் பாதீட்டுக்கான யோசனையை கிராமிய மட்டத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.**

பாதீட்டுக்காகப் பிரதேச ரீதியான குழுக்களினூடாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று நேற்று முன்தினம் வத்தளைப் பிரதேச சபையில் இடம்பெற்றது.

இதில் பங்கேற்று கருத்துரைத்த போதே இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அடுத்த ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தின்படி அரசாங்கத்தின் மொத்த செலவீனம் 2,505.3 பில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் பிரகாரம் புனரமைப்புப் பணிகளுக்கே அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி அந்தப் பணிகளுக்காக 1,776 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தை விடவும் அடுத்த வருடத்திற்கான செலவீனம் 33 பில்லியன் ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான பாதீட்டு ஒதுக்கீட்டு சட்டமூலம் இன்று ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற வாரத்தில் நிதியமைச்சரினால் பாராளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளது.(4-5)

# ஐ.தே.க விற்கு ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை இம்மாதம் தொடங்கவுள்ளதாகவும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதற்கான திகதியை வழங்கியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 20ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சிக்கு மிக முக்கியமான நாள் என்பதால் கட்சித் தலைவர் குறித்த நாளைத்தெரிவு செய்துள்ளதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஒக்டோபர் 20 ஆம் திகதி கட்சியின் நிறுவனர் ஜெனரல் டி. எஸ். சேனாநாயக்கவின் பிறந்தநாள் என்பது குறிப்பிடத்தக்கது. (4-5)

# எரிபொருள் பிரச்சினையைத் தீர்க்க ஓமானுடன் உடன்படிக்கை?

**(கொழும்பு)**

**இலங்கையின் எரிபொருள் விநியோகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 3.6 பில்லியன் டொலர் நிதியுதவியைப் பெற இலங்கை அரசாங்கம் ஓமான் அரசாங்கத்துடன் ஒரு உடன்பாட்டை எட்டவுள்ளது.**

குறித்த நிதியுதவிக்கு ஓமான் அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் இரு நாடுகளும் இந்தத் திட்டத்தைத் தொடர கொள்கை ரீதியாக ஒப்புக் கொண்டதாகவும் அரசாங்கத்தின் உயர்மட்ட தகவலை மேற்கோளிட்டு ஆங்கில ஊடகம் செய்திவெளியிட்டுள்ளது.

தற்போது வரையில் உள்ள இந்த ஒப்பந்தம் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4-5)



ஜப்பான் கடற்படையின் பாரிய போர்க்கப்பல்கள் மூன்று நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்துள்ளன. நாசக்காரி, முரசாமே மற்றும் புடிசுக்கி ஆகிய போர்க்கப் பல்களே கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன. பசுபிக் வலயத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் இரு தரப்பு பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டதை அடுத்து குறித்த கப்பல்கள் நாட்டிற்கு வருகைதந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நிழற்படக் கருவி

ஒரு நண்பர் வந்தார். அவர் சமீபத்திலே ஜப்பானுக்கு போயிட்டு வந்தவர். நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து ஒரு படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றார். கமெரா இருக்கா? என்றேன். இதோ கையோடு கொண்டு வந்திருக்கின்றேன் என்றார். எடுப்பதற்கு இன்னொரு ஆள் வேண்டுமே என்றேன். வேண்டாம் இதுவே எடுத்துவிடும் என்றார். ஓட்டமற்றிக்கா என்றேன். அப்படித்தான் ஆனால் இது தானாக எடுக்காது. நான் கைதட்டினால் அது உடனே வேலை செய்ய ஆரம்பித்து விடும் என்றார். அதேமாதிரித் தான் அதை எதிரிலே வைத்து விட்டு அவர் என்னுடன் வந்து நின்று கொண்டு கையைத் தட்டினார். அது உடனே படம் பிடிக்க ஆரம்பித்துவிட்டது. இப்படிப்பட்ட கமராவெல்லாம் இப்பொழுது வந்தாச்சு. கையைத் தட்டுவது மட்டுமில்லை. வேறு எந்த சத்தமாக இருந்தாலும் அது வேலை செய்யும். எங்கள் விருப்பப்படி குறிப்பிட்ட ஒலிக்கு அது வேலை செய்வது மாதிரி அதை சரி செய்து வைத்துக் கொள்ளலாம்.

இன்றைக்கு இந்தளவுக்கு வந்திருக்கின்ற இந்த புகைப் படக்கலை எப்பொழுது ஆரம்பித்தது தெரியுமா? கமெரா என்பது ஒரு அற்புதமான கண்டு பிடிப்பு. 1839 இலே தான் இது நடந்தது. பிரான்ஸ் நாட்டில் ஹாபிட்கேர். இங்கிலாந்திலே வில்லியம் டால்பட். இவர்கள் இரண்டு பேரும் தான் புகைப்பட நெகட்டிவ் முறையை நாங்கள் கண்டு பிடித்திருக்கின்றோம் என்று அப்பொழுது சொன்னார்கள். கேர் உருவாக்கிய புகைப் படங்களை சாமுவேல் நேரில் வந்து பார்த்தார். இவர் தான் தந்தியைக் கண்டுபிடித்தவர். சிறந்த ஓவியர். இவர் இந்த புகைப்படத்தைப் பார்த்துவிட்டு மிகவும் ஆச்சரியப் பட்டுப் போனார். ரெம்ப்ராண்ட் ஓவியங்கள் மாதிரி மிகவும் தத்ருபமாக இருக்கு என்றார்.

உடனே தன்னுடைய தாய் நாடான அமெரிக்காவுக்கு இதைப்பற்றி கடிதம் எழுதினார். அமெரிக்காவிலேயும் இந்தக் கலை வேகமாகப் பரவ ஆரம்பித்தது. 1840 இலே நியூயோர்க், பிலடெல்பியா ஆகிய நகரங்களிலே உலகின் முதலாவது புகைப்பட ஸ்டுடியோக்கள் ஆரம்பம். இருந்தாலும் 1888 வரைக்கும் கமெராவை ஒரு விநோதமான கருவியாகத்தான் எல்லோரும் நினைத்து இருந்தார்கள். அந்த ஆண்டிலே தான் ஜார்ஜ் ஈஸ்ட்மென் தனது கொடாக் கமெராவை உருவாக்கினார். அப்பொழுது அதன் விலை 25 டொலர் நீளமான மூன்று கால்கள் மேலே உட்காந்திருந்த கமெரா இப்பொழுது கைக்கு வந்தாச்சு. இதற்குப் பிறகு தான் அமெச்சூர் புகைப் படக்கலை என்கின்ற புனிதமான இயக்கமே ஆரம்பமாகியது.

1889 இல் ஈஸ்ட்மென் இன்னொரு புதுமையைச் செய்தார். அதாவது செல்லுலாய்டிலே புகைப்பட புரோமைடு குழம்பைத் தடவி படம் எடுக்கின்ற முறையைக் கொண்டு வந்தார். படம் எடுத்து முடிந்ததும் கமெராவிலிருந்து அகற்றிவிடக் கூடிய பிலிம் சுருளையும் அவர் கண்டு பிடித்தார்.

அதற்கு முன்னாடியெல்லாம் படம் எடுத்ததும் அப்படியே கமெராவுடன் கொண்டு போய் ஸ்டுடியோவிலே கொடுத்துவிட வேண்டும். அங்கே தான் இருட்டு அறையில் கமெராவிலேயே இருந்து பிலிமை எடுப்பார்கள். அடுத்த 30 ஆண்டுகளிலே எவ்வளவோ புதிய மாற்றங்கள். முன்னாடியெல்லாம் கறுப்பு வெள்ளையிலேயே படம் எடுத்து கலர் தீட்டிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுதெல்லாம் கலர் படமே எடுக்கின்றோம். 1928 இல் கொடாக் கலர் பிலிம் வந்தது. அதற்கு அப்புறம் டெக்னிக் கலர் பிலிம் வந்தது.

இரண்டாவது உலக யுத்தம் நடந்த சமயத்திலே தான் புகைப்படக் கலை என்பது பத்திரிகைத் துறையின் ஒரு பிரிவாக மலர ஆரம்பித்தது. இப்பொழுதெல்லாம் புகைப்படக் கருவி என்பது சமுதாய நடவடிக்கைகளை பதிவு செய்கின்ற முக்கியமான கருவி. உள்ளதை உள்ளபடிக் காட்டுவது நிழற்படம். உள்ளதை உணர்ந்தபடிக் காட்டுவது ஓவியம்.

இந்தக் காலத்திலே உள்ளதை உணர்ந்தபடி காட்டுகின்ற நிழற்படங்கள் கூட உண்டு. ஒரு வீட்டிலே ஒரு சின்னப் பையன்–கமெரா வாங்கிக் கொடு என்று தொந்தரவு செய்தான். வாங்கிக் கொடுத்தார்கள். நிறைய படங்களை எடுத்துத் தள்ளினான். அப்பாவிடம் கொண்டு வந்து காட்டினான். ஒரு படத்தை எடுத்துப் பார்த்தார் அப்பா. உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. அம்மாவைக் கூப்பிட்டார்.

இங்கே வந்து உன் பையன் செய்திருக்கின்ற காரியத்தை பார் என்று கத்தினார். என்ன செய்திருக்கின்றான் என்று கேட்டுக் கொண்டு அந்த அம்மா வந்தார். என்னை எப்படிப் படம் எடுத்திருக்கின்றான் பாரு. பார்க்கிறதுக்குக் குரங்கு மாதிரி இருக்கு. இவ்வளவு மோசமாகவா எடுக்கிறது? என்றார். இவர்கள் நிதானமாக அவரிடம் கொஞ்சம் பொறுமையா உங்கள் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பாருங்கள். அது நிஜமாகவே குரங்கு தான். நீங்கள் இல்லை என்றார்கள்.

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

**10**

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



> ஆரம்பத்தில் மக்கள் மத்தியில் சோவியத் படைகளுக்கு ஆதரவு இருந்த போதிலும், தொடர்ந்த காலங்களில் பெருவாரியானவர்கள் கிளர்ச்சிக் குழுக்களில் இணையத் தொடங்கினர்.

மேலும் இந்தப்படையெடுப்பு உலக இஸ்லாமியர்கள் மத்தியில், சோவியத் ஒன்றியத்திற்கு எதிரான மன நிலையை ஏற்படுத்தியது. இதையடுத்து, மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த பல இஸ்லாமிய இளைஞர்கள் பாக்கிஸ்தான் வழியாக ஆப்கானிஸ்தானுக்கு போரிட வந்தனர். இவர்களுக்குப் பல நாடுகளைச் சேர்ந்த உளவு நிறுவனங்களும் உதவி செய்தன. இதன் மூலம் உத்வேகம் பெற்ற முகாஜீதின் குழுக்கள், மே 1985 இல் தங்களுக்குள் ஒரு ஒப்பந்தத்துக்கு வந்தன.

இதன்படி அனைத்துக் குழுக்களும் இணைந்து ஏழுமுகாசிதீன் குழுக்களின் கூட்டமைப்பை உருவாக்கியதோடு, தொடர்ந்து தங்களுக்குள் இணைந்தே சோவியத் படைகளை எதிர்க்கப் போவதாக அறிவித்தன. இதன் மூலம் படைபலம் அதிகம் பெற்ற முகாசிதீன் குழுக்கள் அதே ஆண்டு இறுதிக்குள் காபுல் நகர சுற்று வட்டாரப் பகுதிகளைக்கைப் பற்றும் அளவிற்கு முன்னேறின. மேலும் காபுல் நகர் மீதிலும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தத் தொடங்கின.

### நஜிபுல்லா நாட்டின் தலைவராதல் (1987)

மே 1986 இல், ஆப்கானிஸ்தான் இரகசிய பொலிஸாரின் முன்னாள் தலைவரான முகமது நஜிபுல்லா, பொதுச் செயலாளராகவும் பின்னர் புரட்சிகர கவுன்சிலின் தலைவராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டார். ஒப்பீட்டளவில் இளம் புதிய தலைவர் அந்த நேரத்தில் ஆப்கானிஸ் தான் மக்களால் அதிகம் அறியப்படவில்லை. ஆனால் அவர் நாட்டின் நிலைமையை மாற்றுவதற்காகவும், சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியின் நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட ஆதரவைப் பெறுவதற்கும் விரைவான சீர்திருத்தங்களைச் செய்தார்.

> மே 1986 இல், ஆப்கானிஸ்தான் இரகசிய பொலிஸாரின் முன்னாள் தலைவரான முகமது நஜிபுல்லா, பொதுச் செயலாளராகவும் பின்னர் புரட்சிகர கவுன்சிலின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒப்பீட்டளவில் இளம் புதிய தலைவர் அந்த நேரத்தில் ஆப்கானிஸ்தான் மக்களால் அதிகம் அறியப்படவில்லை.

பாஷ்டோ மற்றும் தாரி ஆகிய இரண்டு மொழிகளிலும் ஒரு சிறந்த பேச்சாளராக இருந்த நஜிபுல்லா பெரியவர்களிடம் ஈடுபாடு காட்டியதோடு தன்னையும் நாட்டையும் இஸ்லாமியராகக் காட்டினார், சில சமயங்களில் குர் ஆனின் பகுதிகளுடன் உரைகளை நிகழ்த்தினார். பல கைதிகள் விடுவிக்கப்பட்டனர், அதே நேரத்தில்1980 முதல் காபூலில் இருந்த ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டது. புரட்சிகர சபை மற்றும் பொலிட்பீரோவிலிருந்து வெளியேற்றப்பட்ட கர்மால் சார்புகளுக்கு எதிராகவும் அவர் நகர்ந்தார்.

அரசியல் அமைப்பில் மாற்றங்கள், இஸ்லாமிய கொள்கைகள் 1987 அரசியலமைப்பில் உட்பொதிக்கப்பட்டன, உதாரணமாக, அரசியலமைப்பின் பிரிவு 2 இஸ்லாம் அரசமதம் என்று கூறியது, மற்றும் பிரிவு 73 கூறுகிறது, அரச தலைவர் ஒரு முஸ்லிம் ஆப்கான் குடும்பத்தில் பிறக்க வேண்டும். 1990 அரசியலமைப்பு ஆப்கானிஸ்தான் ஒரு இஸ்லாமிய நாடு என்று கூறியது, மேலும் கம்யூனிசம் பற்றிய கடைசி குறிப்புகள் அகற்றப்பட்டன. 1990 அரசியலமைப்பின் பிரிவு 1 ஆப்கானிஸ்தான் ஒரு "சுதந்திரமான, ஒற்றை மற்றும் இஸ்லாமிய நாடு" என்று கூறியது.

### உலக நாடுகளின் எதிர்ப்பு

சோவியத் ஒன்றியத்தின் ஆப்கானிய படையெடுப்புக்கு பல உலக நாடுகளும் எதிர்ப்பு தெரிவித்தன. 34 இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த வெளியுறவுத்துறை அமைச்சர்களின் கூட்டறிக்கை ஒன்று சோவியத் ஒன்றியத்துக்குத் தங்களின் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்ததுடன், ஆப்கானிஸ்தானிலிருந்து உடனடியாக வெளியேறுமாறும் கேட்டுக் கொண்டன. மேலும் ஐக்கிய நாடுகள் அவையில் கொண்டுவரப்பட்ட சோவியத் ஒன்றியத்துக்கு எதிரான தீர்மானம் ஒன்று 104-18 என்ற கணக்கில் வெற்றிபெற்று தாக்கல் செய்யப்பட்டது. இதைக் காரணம் காட்டி 1980இல் மொஸ்கோ நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க 60 நாடுகள் மறுத்துவிட்டன.

> சோவியத் ஒன்றியத்தின் ஆப்கானிய படையெடுப்புக்கு பல உலக நாடுகளும் எதிர்ப்பு தெரிவித்தன. 34 இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த வெளியுறவுத்துறை அமைச்சர்களின் கூட்டறிக்கை ஒன்று சோவியத் ஒன்றியத்துக்குத் தங்களின் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்ததுடன், ஆப்கானிஸ்தானிலிருந்து உடனடியாக வெளியேறுமாறும் கேட்டுக் கொண்டன. 1989ல் சோவியத் தனது படைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டது.

இவ்வாறு பல நாடுகளின் அழுத்தம் காரணமாகவும், நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதாலும் சோவியத் ஒன்றியம், பல்வேறு நாடுகளில் இருந்த படைகளைத் திரும்பப் பெற்றது. முதலாவதாக அங்கோலாவில் இருந்த தனது தோழமைப்படைகளைத் திரும்பப் பெற்றது. மேலும் மங்கோலியா மற்றும் வியட்நாமில் இருந்த படைகளும் சோவியத் திரும்பின. தொடர்ந்து 1987 மத்தியில், ஜனாதிபதி கொர்பசோவ் ஆப்கானிலிருந்து சோவியத் படைகள் திரும்பப் பெறப்படும் எனும் அறிவிப்பை வெளியிட்டார்.

### சோவியத்படைகளின் வெளியேற்றம் (1988-1989)

அதிபரின் அறிவிப்பைத் தொடர்ந்து, சோவியத் படைகள் தங்கள் தாக்குதல்களைக் குறைத்துக்கொண்டன. இரண்டு கட்டமாகப் படைகளை ஆப்கானிலிருந்து வெளியேற்றவும் முடிவு செய்யப்பட்டது. இதன்படி, 1988 மே 15 முதல் ஒகஸ்ட் 16 வரை முதல் கட்டமான பாதிபடைகள் வெளியேற்றப்பட்டன. மீதி படைகள் நவம்பர் 15 முதல் 1989 பெப்ரவரி 15 க்குள் வெளியேற்றப்பட்டன.

சோவியத் துருப்புக்கள் வெளியேறல் 1989



முன்னதாகத் திரும்பப் பெறும் படைகளின் மேல் தாக்குதல் நடத்தப் பெறாமல் இருக்க, சோவியத் ஒன்றியம் முஜாஹிதீன் குழுக்களுடன் போர் நிறுத்த உடன்படிக்கையை செய்து கொண்டிருந்தது. இதன்படி அமைதியான முறையில் சோவியத் தனது படைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டன. சோவியத் படைகள் வெளியேறியபிறகும், நஜிபுல்லா அரசுக்கு ரஷ்யா தொடர்ந்து உதவி வந்தது. ஆனால், அவர் கம்யூனிஸப் பாதையிலிருந்து விலகியதும், அந்த உதவிகள் நின்று விட்டன. முஜாகிதீன் குழுக்களை ஆப்கன் இராணுவம் எதிர்த்துப் போரிடுவதற்கு நாட்டின் விமானப் படையே பெரிதும் உதவியது. முஜாகிதீன் படைகள் பெரிதும் பயந்தது போர் விமானங்களுக்குத்தான். ரஷ்யாவின் உதவி இல்லாததால், பறப்பதற்கு பெற்றோல் இன்றி ஆப்கன் விமானப் படை விமானங்கள் முடங்கின. முஜாகிதீன்களின் கை ஓங்கியது. 1992 இல் நஜிபுல்லா வீழ்த்தப்பட்டார். பல சிறுபான்மையினரும், அறிவுஜீவிகளும் யுத்தத்தின் பின்னர் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறினர்.

### நஜிபுல்லாவின் வீழ்ச்சி (1992)

டாக்டர். நஜிபுல்லா ஆப்கானிஸ்தானின் மக்கள் ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளராகவும், 1986 முதல் 1992 வரை ஆப்கானிஸ்தான் ஜனநாயகக் குடியரசின் தலைவராகவும், 1987 முதல் அவர் பதவி விலகும் வரை ஆப்கானிஸ்தானின் தலை வராகவும் இருந்தார். 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி முகாஜிதீன்களின் படைகள் காபூலை அடைந் தன. நஜிபுல்லா சோவியத் ஒன்றியத் துக்கு ஆதரவானவர், மத நம்பிக்கை இல்லாதவர், ஒரு கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களைக் கடைப்பிடிப்பவர். அதனால் முகாஜிதீன்களுடன் அவருக்கு பல வகையில் முரண் இருந்தது.

வேறு வழியின்றி தனது பதவியை இராஜினாமா செய்த நஜிபுல்லா காபூலில் இருந்து தப்பிவிட முயற்சி செய்தார். இந்தியாவிடம் அடைக்கலம் கோரினார். ஓர் ரகசிய விமானத்தில் இந்தியா வுக்குத் தப்பி வர திட்டம் வகுக்கப்பட்டது. இந்தியாவும் உதவிசெய்யத் தீர்மானித்தது.

திட்டம் தெளிவாக இருந்தது. ஜனாதிபதி மாளிகையில் இருந்து கார்கள் மூலம் விமான நிலையத்துக்குச் செல்வது அங்கிருந்து இந்தியாவுக்குள் சென்று விடுவது. இன்னும் முன்னெச்சரிக்கையாக தனது குடும்பத்தினரை இருவாரங்களுக்கு முன்பே இந்தியாவுக்கு அனுப்பி வைத்து விட்டார் நஜிபுல்லா. (தொடரும்...)

# தரமற்ற சேதன உரத்துடன் நாடு திரும்பியது சீனக்கப்பல்



(கொழும்பு)

சீனாவில் இருந்து தரமற்ற சேதன உரத்தை இலங்கைக்கு கொண்டு வந்த கப்பல் நாடு திரும்பியுள்ளது.

அத்துடன் இலங்கை தரத்தின் படி உரத்தை வழங்க நிறுவனம் ஒப்புக்கொண்டதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

உரத்தை இறக்குமதி செய்த நிறுவனம் உரம் தரமற்றது என்றும் அதை சரிசெய்த பிறகு அது மீண்டும் இறக்குமதி செய்யப்படும் என்றும் ஒப்புக்கொண்டதாகவும் அவர் கூறினார். மக்கள், விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கு தீங்கு விளைவிக்கும் எந்த உரத்தையும் இலங்கை இறக்குமதி செய்யாது என்றும் அவர் தெரிவித்தார். (4-5)

# குடிபோதையில் அட்டகாசம்; சிறைச்சாலை அதிகாரிக்கு விசாரணை

(கொழும்பு)

குடிபோதையில் குழப்பம் விளைவித்த சிறைச்சாலை அதிகாரி ஒருவர் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காலி உனவட்டுன பிரதேச ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற செயலமர்வு ஒன்றில் பங்கேற்ற போது இந்த அதிகாரி குழப்பம் விளைவித்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கேகாலை சிறைச்சாலையின் பதில் சிறைச்சாலை ஆணையாளர் ஒருவரே இவ்வாறு குடிபோதையில் குழப்பம் விளைவித்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சிறைச்சாலை திணைக்களம் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (4-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்

## நன்மைகளை வாரி வழங்கும் நவராத்திரி



சகல உலகங்களையும் படைத்து அவற்றையெல்லாம் இயக்கிக் காத்து வருகின்ற சக்தியை வழிபடும் விரதமே நவராத்திரி விரதம்.

ருதுக்களில் வசந்தருது, சரத்ருது என்று இரண்டு வகை உண்டு. இந்த இரண்டு ருதுக்களும் எமனுடைய இரண்டு கோரைப்பற்களுக்கு சமம் என புராண நூல்கள் கூறுகின்றன.

இந்தக் காலகட்டத்தில் மனிதர்களுக்கு அதிக துன்பத்தை விளைவிக்கக் கூடியவை. இவற்றில் இருந்து விடுபட்டு சுபீட்ச வாழ்வை வேண்டி நவராத்திரி விரதத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

**சக்தியின் வழிபாடு**

சிவனுக்கு ஒரு ராத்திரி விசேஷம், அது மகா சிவராத்திரி. சக்திக்கு நவராத்திரி 9 இனிய இரவுகளில் விழா நடைபெறும்.

சித்திரை மாதம் வளர்பிறை பிரதமை முதல் நவமி வரை உள்ள நாட்களை கொண்டது வசந்த நவராத்திரி எனப்படுகிறது. சரத்ருது என்பது, புரட்டாதி மாதம் வளர்பிறை பிரதமை முதல் நவமி வரை உள்ள நாட்கள் ஆகும். இது சாரதா நவராத்திரி எனவும் கூறப்படும். இதுவே விமரிசையாகக் கொண்டாடப்படும் நவராத்திரி ஆகும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## மேல் மாகாணத்தில் 1,156 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் பொலிஸார் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கையில் 1,156 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் 531 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். மேலும் கைது செய்யப்பட்ட நபர்களில் 54 பேர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-5)

## சுற்றுலாப் பயணிகளால் அடுத்த அலை

(கொழும்பு)

நாட்டில் மீண்டுமொரு ஆபத்தான கொரோனா அலையை எதிர்கொள்ள நேரிடும் என விசேட வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். வெளிநாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை பி.சி.ஆர்.பரிசோதனை இன்றி நாட்டுக்குள் அனுமதிக்கும் முடிவினாலேயே அடுத்த கொவிட் அலை உருவாகும் என வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர். (4-5)

## 8 பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 38ஆம் கிராமத்தில் உள்ள வாய்க்காலிலிருந்து நேற்று ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டவர் 47 வயதுடைய 8 பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை வீட்டில் இருந்து வயலுக்கு போனவர் வீடு திரும்பாத நிலையில் வயல் வடிகான் நீருக்குள் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 130 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 150 |
| தக்காளி | 70 | 50 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 |
| கோவா | 160 | 150 | 160 |
| கரட் | 150 | 180 | 200 |
| பூசணி | 70 | 60 | 60 |
| புடோல் | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 170 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 150 |
| பாகற்காய் | 400 | 320 | 450 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 250 | 220 | 240 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 150 | 150 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 180 | 240 |
| போஞ்சி | 240 | 260 | 280 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 30 | 70 |
| தேசிக்காய் | 350 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 65 | 65 | 50-70 |
| இராசவள்ளி | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | -- | 220 | 300 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 |
| வல்லாரை | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 50 | 100 |



# சிறுவர் அரங்கம்

## மலைப்பாம்பும் மான்குட்டியும்

குரட்டி என்றபெயர் கேட்டால் மஞ்சளாறு காட்டில் சிறுத்தைகளும், புலிகளும் கூட பயப்படும்.

இருபது அடிக்கும் நீளமாகமரங்களின்கிளைகளில் படர்ந்து இருக்கும்தனது அழகிய உடம்பும், கரும்புள்ளிகளும் அதற்கு பெருமையாக இருந்தது.


கரும்பழுப்பு, பழுப்பு என்று பல நிறங்களில் மலைப்பாம்புகள் இருக்குமே தவிர இப்படி லட்சணமான கரும்புள்ளிகளுடன் பார்ப்பது ரொம்பவும் அரிது.

மலைப்பாம்புகள் பொதுவாக பறவைகள், முயல் போன்ற சிறிய பிராணிகளைப் பிடித்து உண்ணும். சில சமயம் மான் போன்ற சற்றுப் பெரிய விலங்குகளைக் கூடத் தாக்கும்.

ஆனால்குரட்டி சற்று வித்தியாசமானது. காட்டெருமைக்கன்று, சிறுத்தை போன்றவற்றைக் கூட தனது குரட்டிப் பிடியில்நொறுக்கி எடுத்துவிடும். அதனால் அதற்கு குரட்டி என்று பெயர்வழங்கி வந்தது.

குரட்டி தனது தலையை ஒரு கிளையின் மீது வைத்துபடி ஆற்றங்கரையையே பார்த்துக் கொண்டு இருந்தது.

மிரண்டு மிரண்டு ஆற்றங்கரையில் வரும் இளம் மான் குட்டி அதன் கண்ணில் பட்டது.



நீண்டு கிடந்த தனது உடலை வேகமாக தன்னை நோக்கி இழுத்தது.

அநேகமாக அந்த மான்குட்டி மிகவும் குறுகலாக ஓடும், அந்த ஆற்றைக் கடந்து வரலாம். அப்படிக்கடந்து வந்தால் குரட்டி இருக்கும் வழியாகத்தான் வரவேண்டும்.

அந்த இளம் மான் ஆற்றில் இறங்கியது. குரட்டியில் வாயில் நீர் சுரந்தது.

மீதமுள்ள குரட்டி தனது உடலை கிளையில் சுற்றிதனதுதலையை மட்டும் தொங்க வைத்தபடி அசையாமல் இருந்தது. பார்வை மட்டும் ஆற்றில் இறங்கிய மான் மீது இருந்தது. (தொடரும்)

# மகாபாரதம்




களைப்பைப் போக்க தன் சிறகால் விசிறிற்று. இலைகளால் ஆன படுக்கையையும் அளித்தது. பின் அவன் வருகைக்கான காரணத்தைக் கேட்டு அறிந்தது.

பின் "கவலை வேண்டாம் திரண்ட செல்வத்துடன் நீ திரும்புவாய் என்று சொல்லி "பணம் சேர்க்கும்வழிகள்" எனப் பிரகஸ்பதி சில வழிகளைச் சொல்லியிருக்கிறார்.

அவற்றில் நண்பன் மூலம் சேர்த்தல் சிறந்த வழியாகும்.இப்போது உன் நண்பன் நான். உனக்குத் தேவையான வழியைக் கூறுகிறேன்" என உரைத்தது.

"அழகு மிக்கவனே.. இவ்வழியே சென்றால் விருபாட்சன் என்னும் என் நண்பனைக் காண்பாய். அவன் அசுரர்க்கு அதிபதி. மிகவும் பலம் வாய்ந்தவன்.என் சொல்லைக் கேட்டுப் பெரும் செல்வத்தை உனக்குத் தருவான்" என்றும் உரைத்தது.

கௌதமன் பின், அக்கொக்கு சொன்ன வழிச் சென்றான். இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தபடியே மனுவ்ரஜம் என்னும் நகரை அடைந்தான்.

அந்நகரம் கற்களால் ஆன தோரணங்களைக் கொண்டு கம்பீரமாகக் காட்சியளித்தது. அந்த அந்தணன் தன் நண்பனால் அனுப்பப்பட்டவன் என்பதை உணர்ந்த அசுரன் அவனை விருந்தினனாக உபசரித்தான்.

அந்தணனை விருந்தினராக ஏற்றுக்கொண்ட அசுரன் அவனது குலம், கோத்திரம் பற்றி விசாரித்தான். அந்தணன் கூறினான்.

நான் மத்திய நாட்டைச் சேர்ந்தவன். தற்போது ஒரு வேடன் வீட்டில் தங்கியிருக்கிறேன். ஏற்கனவே திருமணமான ஒருத்தியை மணந்து வாழ்கிறேன்.

இதைக் கேட்டு அசுரன் சிந்தனையில் மூழ்கினான். "இவன் பிறப்பால் அந்தணனாக இருந்தும் ஒழுக்கத்தில் அப்படியில்லை. ஆயினும் என் நண்பன் ராஜதர்மா என்னும் பறவையால் அனுப்பப்பட்டவன்.

ஆகவே, இவனுக்கு வேண்டியவற்றைத் தருவேன். மற்ற அந்தணருடன் உணவை இவன் அருந்தட்டும். இனிச் சிந்திக்க ஏதுமில்லை. மிக்க செல்வத்தை இவனுக்கு அளிப்பேன்" என்னும் முடிவுக்கு வந்தான். அந்த நேரத்தில் ஏராளமான அந்தணர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். (தொடரும்)

நீ செய்யும் பாவமே உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும்.
— *பைபிள்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேவையற்ற குற்றச்சாட்டுக்கள் இலக்கை சிதைத்துவிடும்

கதை கட்ட நாலு பேர் இருந்துவிட்டால் கண்ணகி வாழ்விலும் களங்கம்தான் என்றார் கவியரசு கண்ணதாசன்.

கண்ணகியின் சுயஒழுக்கத்தைச் சிதைக்கும் வகையில் கதைகட்டல்கள் உருவாக்கப்படுமாயின், அஃது கண்ணகியின் வாழ்வில் களங்கத்தை ஏற்படுத்துவது மட்டுமன்றி, உயிரைவிட மேலான ஒழுக்கத்தின் பெறுமதியையும் அது நலினப்படுத்திவிடும்.

தவிர, கண்ணகியின் வாழ்வில் களங்கத்தை ஏற்படுத்தக்கூடிய கதை கட்டலில் ஈடுபட்டவர்களின் வாழ்க்கையும் சின்னாபின்னப்பட்டு சீரழிந்து போகும்.

இந்தச் சீரழிவால் பாதிக்கப்பட்டவர்கள் அதினின்றும் பிராயச்சித்தம் பெறுவது எங்ஙனம் என்று சிந்தியாமல், மென்மேலும் மற்றவர்கள் மீது குறையும் வசையும் பாடிய வண்ணமே காலம் கழிப்பர்.

ஆக, பிறர் மீது குற்றம்சாட்டுவதற்கு முன்னதாக குறித்த குற்றச்சாட்டில் இருக்கக்கூடிய உண்மைத்தன்மையை பலமுறை ஆராய்ந்து ஆதாரங்களுடன் அதனை உறுதி செய்ய வேண்டும்.

இதைவிடுத்து ஊகத்தின் அடிப்படையிலும் சுயலாபத்தை மையப்படுத்தியும் செய்யப்படும் விசமத்தனமான பிரசாரங்கள் பிறரையும் வதைத்து எய்தவரையும் வஞ்சிக்கும்.

ஆம், எடுத்ததற்கெல்லாம் பொய்ப் பிரசாரம், விசமத்தனமான குற்றச்சாட்டுக்கள் என்பன ஏவப்படுமாயின், அந்த ஏவுகை எய்தவனைத் திருப்பித் தாக்கும்போது அந்த விசமத்தனமான பிரசார நோய் அந்தச் சமூகம் முழுவதையும் ஆக்கிரமித்திருக்கும்.

எனவே சொந்த அரசியல் இலாபங்களுக்காகச் செய்யப்படுகின்ற பொய்க் குற்றச்சாட்டுக்கள் நல்லவர்களின் அரசியல் பிரவேசத்துக்குத் தடையாக அமையும்.

இந்த நிதர்சனத்தை நம்தமிழினம் இன்று நடைமுறையில் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே குற்றத்தைச் சுமத்துவதற்கு முன்னதாக, ஒரு தடவைக்கு இரு தடவை உங்கள் மனச்சாட்சியிடம் கேளுங்கள் நான் செய்வது சரியா?

இவ்வாறு எனக்கு யாரேனும் செய்தால் அதை என்னால் ஏற்க முடியுமா? எனது இந்த விசமத்தனத்துக்கு கன்மவினைக் கோட்பாட்டின் பலாபலன் என்ன? என்று கேளுங்கள்.

உங்கள் மனச்சாட்சி உங்களை வருத்துமாயின், அதிலிருந்து விலகி நல்லதை – உள்ளதை – உண்மையை நெஞ்சார எடுத்துரையுங்கள். அது நீங்கள் உங்கள் மக்கள் சமூகத்துக்குச் செய்கின்ற மிகப்பெரும் தர்ம காரியமாக இருக்கும்.

# யாழ். மத்திய கலாசார நிலையம் வெகுவிரைவில் திறக்கப்படும்

## யாழில் இந்திய வெளியுறவுச் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் நிதிப் பங்களிப்போடு அமைக்கப்பட்டுள்ள கலாசார மத்திய நிலையம், இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புடன் வெகுவிரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது என இந்திய வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா தெரிவித்தார்.

இந்தியாவின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை பார்வையிட இந்திய வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா நேற்று மாலை 6 மணியளவில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண நகரின் மத்தியில் மிகப் பிரமாண்டமான மண்டபமாக இந்திய அரசின் நிதிப் பங்களிப்போடு இந்த கலாசார மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மத்திய நிலையமானது வெகுவிரைவில் இலங்கை அரசின் பங்களிப்புடன் திறந்து வைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு திறந்து வைக்கப்பட்ட பின்னர் எதிர் வரும் ஐந்து வருடங்களுக்கு கட்டடத்தின் பராமரிப்புச் செலவினையும் இந்தியாவே பொறுப்பேற்கவுள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அத்தோடு இலங்கைக்கு இந்தியா பல்வேறுபட்ட உதவிகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது என்றார்.(ஞா-33)

### கோட்டக்கல்வி அலுவலகங்கள் முன்பாக

## உலக ஆசிரியர் தினத்தில் அதிபர், ஆசிரியர்கள் போராட்டம்

### இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஒக்ரோபர் 6 ஆம் திகதி உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நாடுமுழுவதும் 312 கோட்டக்கல்வி அலுவலகங்கள் முன்பாக தொடர் போராட்டங்களை நடத்த ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

நேற்று ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

சம்பள முரண்பாடுகளுக்கு உடனடித்தீர்வு மற்றும் மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாக்க வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பித்து 84 நாட்கள் கடந்தும், அரசு எந்த தீர்வையும் வழங்கவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி ஒரு தீர்வை வழங்குவதே கற்பித்தல் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கு ஒரே வழி என்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவிந்தார். (ஞா)

## வடக்கில் 33 பேருக்கு நேற்று கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஐந்து பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 33 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 167 பேருக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில்,யாழ்.மாவட்டத்தில் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 பேர் (யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர்கள் ஐவர், மாணவர் ஒருவர்), யாழ். போதனா வைத்தியசாலையில் 5 பேர், வவுனியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 பேர் என தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(ஞா)

### மருத்துவக் குறிப்பு

நாவல் பழச்சாறு சாப்பிட இரத்தபேதி நிற்கும்.
நாவற்பழம் சாப்பிட்டாலும் இரத்தபேதி குணமாகும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மக்களின் அறிவு வளர்ச்சி



அறியாமை என்ற மயக்கத்தில் வாழும் மக்களுக்கு மேலும் மயக்கத்தையூட்டி அதன் மூலமே வயிறு வளர்த்து வாழும் ஒருவரைத் தவறுதலாக அறிவாளி என்றோ, பெரிய மனிதர் என்றோ, அரசியல் தலைவர் என்றோ, சாது என்றோ, ஞானி என்றோ, மக்கள் கருதும் வழக்கில் உலகம் சிறிது சிறிதாக மாறிக் கொண்டே வருகின்றது.


யார் எந்தக் கருத்தை வெளியிட்டாலும், இயற்கையமைப்பு, மனித இன வரலாறு, முன்னோர் கருத்து, தற்கால உலகப் போக்கு, தனது அறிவு நிலை, விஞ்ஞானம், இவைகளோடு அதை ஒப்பிட்டு ஆராய்ந்து தெளிவு காணும் அளவிற்கு, உலக மக்களின் அறிவு நிலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றது.

தனித்த ஒரு மனிதனையோ, அவன் கருத்தையோ, சிறப்பித்துப் பேசிக் கொண்டிருப்பதிலேயே காலம் கழிந்து, தான் பயனற்றுப் போகும் அறியாமை இருள், சுய ஆராய்ச்சியால் மக்களிடமிருந்து விலகி வருகின்றது.

இதன் விளைவாக மனிதன் மகத்துவத்தை மனிதன் அறிந்து மனிதனாகவே வாழத்தக்க சூழ்நிலைகள் உலக முழுவதும் குறுகிய காலத்திலேயே உருவாகிவிடும் என்பது திண்ணம்.

# அத்தியாவசிய உணவு தட்டுப்பாட்டில், வர்த்தக சட்டமும், அவசரகால சட்டமும்

# Commercial Laws and Emergency Laws in Scarecity of Essential Food Items



பேராசிரியர் செ.இளங்குமரன்,
B.Sc(Hons), M.Stat, Ph.D, LLB
புள்ளிவிவரவியற்பேராசிரியர்,
பொருளியற்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

### 3. உணவுச் சட்டத்திலுள்ள குறைபாடுகள், இடைவெளிகள்
### Drawbacks and Loopholes in Food Act

இச்சட்டம் 1980 இல் கொண்டு வரப்பட்டதற்கான காரணம், அப்போது நடைமுறையிலிருந்த சட்டங்களான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், நியாயவர்த்தக ஆணைக்குழுச் சட்டம் என்பன உணவுப் பண்டங்களின் உற்பத்தி, வியாபாரம் தொடர்பில் பொருத்தமான ஏற்பாடுகளின்றி வலுவற்றிருந்தமையாகும். (1) நடைமுறையிலிருந்த உணவு, மருந்துக்கான (1961 திருத்தத்துடன்) கட்டளைச் சட்டத்தினை இல்லாதொழித்தல் (2) உணவு ஆலோசனைச்சபையொன்றை (Food Advisoty Committee) நிறுவி (3) உணவுப் பொருட்களை உற்பத்தி-,றக்குமதி செய்தல், விநியோகித்தல், விற்பனை-செய்தல் என்பனவற்றை ஒழுங்குபடுத்தி-கட்டுப்படுத்துதல் (4) எதிர்பாராமல் ஏற்படும் விடயங்களை கையாள்தல் எனும் நோக்கங்களுடன் இச்சட்டம் ஆக்கப்பட்டுள்ளது.

1991, 2011 ஆம் ஆண்டுத் திருத்தங்களுடன், இச்சட்டவாக்கம் தற்போதைய உணவுச்சூழலைக் கையாள்வதற்குப் போதுமான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளதா என நோக்குவோம். இச்சட்டத்தின் பாகம் 1, உணவுப் பண்டங்களின் பதிவு, தரம், சுகாதாரம், நியமம், உரிமம், கலப்படம், உத்தரவாதம், மாற்றுப்பயன்பாடு, கட்டுத்துண்டிடல், பொதியிடல் தொடர்பில் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் (Food Regulations, 1986) வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளன. ஏற்பாடுகள், ஒழுங்குவிதிகள் தற்போது புதிதாக எழுந்துள்ள பிரச்சனைகளைக் கையாழ்வதற்கு பொருத்த மற்றவையாகும். அப்பிரச்சனைகளும், அவ்வேற்பாடுகளும், அவ்வொழுங்கு விதிகளும் வழமையான சட்டநடவடிக்கைகளுக்குட்பட்டவையாகும். அப்பிரச்சனைகள் அங்கொன்று இங்கொன்றாக ஏற்படுபவையாகவும் முழுச்சமூகத்தையும் ஒரேநேரநெருக்கடிக்குள் உட்படுத்துபவையாக இருக்கவில்லை.

பாகம் II, உணவு ஆலோசனைச்சபை அமைக்கப்படல், அச்சபையின் கடமைகள், நியமிக்கப்பட்ட, தேவைகருதி நியமிக்கப்படக்கூடிய அதிகாரிகள், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள், அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள், அவ்வுத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரங்கள் பற்றிய ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. தற்போதைய பிரச்சனை அத்தியாவசிய உணவுப் பண்டங்களை "பதுக்கி வைத்திருத்தல்", "செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்துதல்", "உயர்வு விலையில் விற்றல்" என்பனவாகும். இப்பாகத்திலுள்ள பிரிவு 14 இன் ஏற்பாடுகள் மூலம் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களினால் உணவுப் பொருட்களைத்தேடும், பரிசோதிக்கும், தடுத்துவைக்கும், கைப்பற்றும் அதிகாரங்களை பாகம் I இல் கூறப்பட்ட காரணங்களுக்காக மட்டுமே சாதாரண சட்டத்தின் கீழ்ப் பிரயோகிக்க முடியும்.

பாகம் II, இன் பிரிவு 13(3) ஆனது ஒரு அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகஸ்தர், 1979 ஆம் ஆண்டின் குற்றவியல் நடபடி முறைச் சட்டத்தின் (Criminal Procedure Act, No.15 of 1979) மூலம், ஒரு பொலீஸ் அதிகாரியின் அதிகாரங்களைப் பயன்படுத்த முடியுமெனக் கூறுகின்றது. இவ்வதிகாரத்தைபாகம் I,ல்கூறப்பட்ட காரணங்களுக்காக மட்டுமே பிரயோகிக்க முடியும். இருந்தபோதிலும், பிரிவுகள் 13(3) மற்றும் 14 இன் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் கூட, பிரிவு 15 இன் படி நீதவான் நீதிமன்ற நடவடிக்கையொன்றின் மூலமே கைதுசெய்யப்பட்ட வியாபாரிக்கு எதிராகவும், கைப்பற்றப்பட்ட பண்டம் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கமுடியும். எனவே தற்போது நாட்டிலுள்ள மேற்படி பிரச்சனைக்கு உடனடியான தீர்வு இச்சாதாரண சட்டத்தில் காணப்படவில்லை.

பாகம் III, வியாபாரிகளினால் ஏற்படுத்தப்படும் குற்றங்களுக்கான சட்டநடவடிக்கைகள் பற்றி விளம்புகின்றது. ,ச்சட்டத்தின்படி இழைக்கப்படும் குற்றங்களுக்கே அவ்வாறான சட்டநடவடிக்கைகள் விபரிக்கப்படுகின்றன. அதாவது பாகம் I ,ல் விவரிக்கப்பட்ட முறைகேடுகளுக்கே அவை உள்ளன. அதாவது, உணவுப் பண்டங்களில் பதிவு, தரம், சுகாதாரம், நியமம், உரிமம், கலப்படம், உத்தரவாதம், மாற்றுபயன்பாடு, கட்டுத்துண்டிடல், பொதியிடல் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அவற்றின் கீழான ஒழுங்குவிதிகளை மீறியமைக்காக குற்றஞ்சாட்டப்படும் நபர்களுக்கெதிராகவே சட்டநடவடிக்கை மேற்கொள்ளமுடியும். ஆனால் உணவுப்பண்டங்களை பதுக்கி வைத்திருத்தல், செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்துதல், உயர்வு விலையில் விற்றல்தொடர்பாக எந்த நடவடிக்கையையும் இச்சட்டத்தின்கீழ் எடுக்க முடியாது.

இச்சட்டவாக்கத்தின் நான்கு நோக்கங்களில் (3) வதுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளே உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனால் தற்போதைய சூழ்நிலையினை இச்சட்டத்தின் மூலம் கையாள முடியாது. நோக்கம் (4) இற்கான ஏற்பாடுகள் பாகம் IV இல்கூட வெளிப்படையாக இல்லை. மந்திரியிற்கு பிரிவு 32 ஊடாக வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளை வழங்கும் அதிகாரங்கள் கூட பயனளிக்காது.

### 4. நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின் பலமும், பலவீனமும்
### Strength and Weakness in Consumer Affairs Authority Act

இச்சட்டமானது 1983 இல் கொண்டு வரப்பட்டதற்கான முக்கிய காரணம் அப்போது நடைமுறையிலிருந்த மூன்று சட்டங்களான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், நியாய வர்த்தக ஆணைக்குழுச் சட்டம் என்பன பாவனையாளர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வலுவான ஏற்பாடுகள் எதனையும் கொண்டிருக்காமையினால் அவற்றை இல்லாதொழித்து புதிய சட்டவாக்கத்தினை கொண்டுவருதலாகும். ,ச்சட்டத்தின் பாகம் I, இன்மூலம் நுகர்வோர்-விவகார-அதிகாரசபையும், பாகம் IV, இன்மூலம் நுகர்வோர்-விவகார-பேரவையும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. நுகர்வோர்-விவகார-அதிகாரசபையானது பொதுவாக பாவனையாளர்-பாதுகாப்பு-அதிகாரசபை எனப்படுகின்றது. பாகம் II, நாட்டின் வர்த்தகச்சூழலை ஒழுங்குபடுத்துவதாகவும், பாகம் III, பாவனையாளர்களின் விருப்பங்கள், போட்டி வர்த்தகம் என்பனவற்றை விருத்தி செய்வதாகவும் உள்ளன.

இச்சட்டத்தின் பாகங்கள் ஐஐ, III இலுள்ள ஏற்பாடுகள் தொடர்பான மீறல்களை விசாரிக்கவும், தீர்த்துவைக்கவும் பாவனையாளர்-பாதுகாப்பு-அதிகாரசபைக்கு (பா.பா.அ.சபை) அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீடுகளை விசாரிப்பதற்காக மட்டுமே நுகர்வோ-விவகார-பேரவை ஒன்று ஸ்தாபிக்க ப்பட்டுள்ளது. பா.பா.அ. சபையின் நிறைவேற்று அதிகாரங்கள், பாகம் II இன், பிரிவு 6 இன்படி, தேவைக்கேற்ப நியமிக்கப்பட்ட அரச அலுவலர்கட்கு பகிர்ந்தளிக்கப்படும். ,லங்கையின் வர்த்தகச் சட்ட வளர்ச்சியில் ஏற்கனவே இருந்த பலகுறைபாடுகளையும், இடைவெளிகளையும் சீர்செய்யும் படி முறையாகவே இச்சட்டம் ஆக்கப்பட்டுள்ளது.

பிரிவு 7 இன் படி பா.பா.அ. சபைக்கு நான்கு பிரதான குறிக்கோள்கள் உள்ளன. அவையாவன:

(1) நுகர்வோரின் வாழ்க்கை, சொத்துக்களுக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்களை சந்தைப்படுத்துதல், சேவைகளை வழங்குதல் ஆகியவற்றிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல்.

(2) நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளிலிருந்து நுகர்வோரைப்பாதுகாத்து அவர்களின் விருப்பங்கள், உரிமைகளுக்கு உத்தரவாதமளித்தல்.

(3) போட்டிச்சந்தை விலைக்கேற்றவகையில் பொருட்களும், சேவைகளும் நுகர்வோருக்கு போதுமானளவு கிடைப்பதை இயலுமானவரை உறுதிப்படுத்தல்.

(4) முறையற்ற, மட்டுப்படுத்தப்பட்ட வணிக நடவடிக்கைகள், வேறுவழிகளில் சுரண்டுதலிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்து பரிகாரங்கள் கிடைக்க வழிசெய்தல்.

பா.பா.அ.சபையின் செயற்பாடுகளில், பிரிவு 8 ,ன்படி, தற்போதய நிலமைக்குத் தொடர்புடையவை:

(1) "வர்த்தகர்கள் தமக்குள் மட்டுப்படுத்திய-வர்த்தக-உடன்பாடு, அறா-விலை-நிர்ணயம் செய்தல்", "தனி-வர்த்தகர் சந்தையினுள்-ஆதிக்கம்-துஸ்பிரயோகம் செலுத்தி முதன்மை நிலை அடைதல்", "வர்த்தகத்தைப் பாதிக்குமாறான போட்டியினை தவிர்க்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்" எனும் நிலமைகளை நீக்கும்-கட்டுப்படுத்தும் செயற்பாடு,

(2) "போட்டிச்சந்தை செய்முறைக்கு மாறாக ,யங்கி துஸ்பிரயோகம் மூலம் முதன்மை நிலையினை அடைபவர்கள்" தொடர்பில் புலனாய்வு, விசாரணைச் செயற்பாடு,

(3) பண்டங்களையும், சேவைகளையும் வழங்குவோரிடையில் திறன் போட்டியினை விருத்திசெய்து, பராமரித்து, திறனற்ற போட்டியில் போட்டி விலையினை விருத்தி செய்யும் செயற்பாடு,

(4) "விலை-கையிருப்பு-தரம் தொடர்பாக பண்டங்கள்-சேவைகள் பன்முகமாக வழங்கப்படுதலை உறுதி செய்து, நுகர்வோர், கொள்வனவாளர், வேறுபயனாளிகளின் உரிமைகள்-விருப்புகளை, பாதுகாத்து விருத்திசெய்யும் செயற்பாடு,

(5) இச்சட்டத்திலுள்ள விடயங்கள் தொடர்பிலும், ஏற்பாடுகளை மீறுவோர் தொடர்பிலும், புலனாய்வு செய்து விசாரணை செய்யும் செயற்பாடு,

என்பனவாகும்.

பா.பா.அ.சபை, பாகம் ஐஐ ,ன், பிரிவு 9 இன்படி, பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்நாட்டு வர்த்தகத்தினை ஒழுங்குபடுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(1) நுகர்வோர்க்கு கிடைக்ககூடிய எவ்வகை பண்டங்கள், சேவைகளினதும் விற்பனை-வழங்கல்தொடர்பில்விசாரணை-ஆய்வுகளை நடத்திபோதுமான-அளவில், நியாயமான-விலையில், திருப்தியான-தரத்தில் பண்டங்கள்-சேவைள் நுகர்வோர்க்கு கிடைப்பதை உறுதிப்படுத்துதல்,

(2) மேலே (1) ,ல் சொல்லப்பட்ட நோக்கத்துக்காக அரசுக்கும், நுகர்வோர் சங்கம் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களுக்கும் உதவுதல், ஊக்குவித்து மேம்படுத்துதல்,

(3) இச்சட்டத்தின் பிரிவு 14 இலுள்ள நோக்கங்களுக்கேற்ப, வர்த்தக சங்கங்களுக்கு உதவி செய்து, ஊக்குவித்து அவர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல்.

இச்சட்டத்தின்பிரிவு 14 ஏற்பாடு செய்வது என்னவெனில்,

(1) பண்டமொன்றுக்கான உச்சவிலை, நியமம், விபரக்குறிப்பு, வேறு அவ்வாறான சிறப்பியல்புகளை உற்பத்தி, இறக்குமதி, களஞ்சியப்படுத்தல், பொதியிடல், விநியோகம், விற்பனை தொடர்பில் வர்த்தகர் சங்கங்கள், இறக்குமதியாளர்களுடன் எழுத்துமூல ஒப்பந்தம்மேற்கொள்ளுதல்,

(2) மேலே (1) இல் சொல்லப்பட்ட ஒப்பந்தங்களை வர்த்தமானி, பத்திரிகைகளில் பிரசுரிப்பதுடன் அவர்களாலோ, அவர்களுடன் அச்செயற்பாடுகள் தொடர்பில் பணியாற்றுபவர்களாலோ ஒப்பந்த விதிகள் மீறப்படின் விசாரணையொன்றின் மூலம் குற்றவாளிஎனக் கண்டறிதல்,

தொடரும்...

## விரிவுரையாளர்...

நிலையில் மாணவர்களை அழைத்து வகுப்பு நடத்திய யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர்கள் ஐந்து பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக அனுப்பி மேற்கொள் ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த விரிவுரையாளர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் ஐந்து பேர் விரிவு ரையாளர் என்றும் அவர்களுடன் மாண வர் ஒருவரும் தொற்றாளராக அடை யாளம் காணப்பட்டுள்ளார். (ஞா)

## ராஜபக்ஷ அரசை...

லாம் எவரும் வெளியேறலாம்." இவ்வாறு ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் நிதி அமைச்சரு மான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற் பத்தி நிலையத்தின் பங்குகள் அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்படுவதற்கு "மொட்டு" கூட்டணி அரசிலுள்ள பங்காளிக் கட்சியினர் போர்க்கொடி தூக்கியுள்ளனர். அரசுக்கு எதிராகப் பகிரங்கமாகவும் மறை முகமாகவும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஊடகங்களிடம் மேற்கண்ட வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது,

"எமது அரசில் கருத்துச் சுதந்திரத்துக்கு இடமிருக்கின்றது. எவரும் அரசை வாழ்த் தலாம் விமர்சிக்கலாம்.

ஆனால், அரசை வீழ்த்தலாம் என்று உள்ளேயும் வெளியேயும் யாரும் சூழ்ச்சி வகுத்தால் அது ஒருபோதும் வெற்றியளிக் காது என்றார். (ஞா)

## இளம் குடும்பஸ்...

பகல் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மரணம் அடைந்தவர் துன் னாலை வேம்படிப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்வராசா தீபகரன் (வயது- 32) என்ப வராவார்.

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு சென்ற ஈரவெட்டி மரண விசா ரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசா ரணைகளை மேற்கொண்டார். (ஞா-60)

## 40 பேர்...

தார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவற்றுடன் இலங்கையில் பதிவாகிய மொத்த கொரோனா மரணங்கள் 13,059 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## கடுமையான...

தொற்றுநோயால் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, நாடு மீண்டும் திறக்கப்பட்டுள்ள நிலையில் தொழிற்சங் கங்கள் அல்லது ஏதேனும் குழுக்கள் வேலைநிறுத்தங்கள் மற்றும் போராட்டங் களை நடத்தினால் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பொறுப்பான அமைச் சராக நான் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும் எனவும் அவர் எச்சரித் தார். (ஞா)

## தாயையும்...

கொள்ளையில் ஈடுபட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் சந்தேகத்தின் அடிப் படையில் கைது செய்யப்பட்டு விசா ரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் சந்தேகநபர்களை கைது செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஞா-30)

(விரிவான செய்தி6ஆம் பக்கத்தில்)

## கடமைக்கு இடை...

ஊரெழுப் பகுதியில் நேற்றிரவு 8 மணியள வில் இடம்பெற்றது.

"ஊரெழுப் பகுதியில் பொலிஸார் கடமை யில் ஈடுபட்டிருந்தனர். மோட்டார் சைக் கிள் ஒன்றில் இருவர் தலைக்கவசமின்றி ஆபத்தான முறையில் பயணித்தனர்.

அவர்களை வழிமறித்து சாரதி அனு மதிப்பத்திரத்தை வாங்கி தண்டனைப் பத்திரம் எழுத முற்பட்டபோது அங்கு வந்த பிரதேச சபை உறுப்பினர் பொலிஸாருடன் முரண்பட்டார்.

அவரது நடவடிக்கை எல்லை மீறிச் சென்றதனால் பொலிஸ் உத்தியோகத்தர் வானத்தை நோக்கி இரண்டு தடவைகள் சூடு நடத்திஎச்சரித் தார்" என்று பொலி ஸார் தெரிவித்த னர்.

சம்பந்தப்பட்ட பிர தேச சபை உறுப் பினர் தன்னை ஈபி டிபி கட்சி என அறி முகப்படுத்தி பல தடவைகள் பொலிஸாரு டன் முரண்பட்டு கடமைக்கு இடையூறு விளைவிப்பவர் என்றும் பொலிஸார் கூறினர். (ஞா-18,33)

## அரசுக்குள்...

சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரண சிங்க வலியுறுத்தினார்.

இவர்கள் அரசுக்குள் இருந்துகொண்டு அரசையே விமர்சித்து வருகின்றனர் என வும், இது எந்த வகையிலும் பொருத்தமற்ற செயல் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் ததாவது,

அரசு மக்கள் வழங்கிய மூன்றிலி ரண்டு பெரும்பான்மைப் பலத்துக்கமைய செயற்பட்டு வருகின்றது. அதனைச் சீர் குலைக்க அரசில் அங்கம் வகிக்கும் எவ ராலும் முடியாது. சில அமைச்சரவை அந் தஸ்துள்ள அமைச்சர்கள், அமைச்சரவை யில் எடுக்கப்படும் தீர்மானங்களை வெளி யில் வந்து விமர்சிக்கின்றனர்.

இப்படியான நபர்கள் குறித்து மிகத் துரிதமாகத் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். தொடர்ந்தும் இந்தச் சூழ்ச்சி யாளர்கள் அரசுக்குள் இருந்தால், அது அரசின் பயணத்துக்குத் தடையாக இருக் கும். எனவே, இந்தச் சதிகாரர்களை அரசி லிருந்து உடனடியாக வெளியேற்ற வேண் டும்" என்றார். (ஞா)

















































# எந்த நேரத்திலும் தேர்தலை சந்திக்க அரசாங்கம் தயார்

## அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் எந்த நேரத்திலும் தேர்தலை சந்திக்கத் தயாராக இருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஊடகங்களிடம் நேற்று பேசிய அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தங்கள் ஆணையை புதுப்பிக்க பொதுமக்கள் முன் செல்ல தயங்க மாட்டேன் என்றார். எவ்வாறாயினும், தேர்தல் தாமதங்கள் தொடர்பாக முந்தைய நிர்வாகத்துடன் போராடியதாகவும் கூறியுள்ளார்.



வாக்காளர்கள் அரசாங்கங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதால், ஆணையைப் புதுப்பிக்க அவர்களுக்கு அவ்வப்போது வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் நாமல் குறிப்பிட்டுள்ளார்.

சரியான நேரத்தில் தேர்தலை நடத்துவார்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள் எனவும் அவர் கூறியுள்ளார். இதனிடையே, தேர்தல்களை நடத்துவதற்கு தாம் தற்போது கலந்துரையாடல்களை நடத்தவில்லை.

ஆனால் மக்களுக்கு சலுகைகளை வழங்குவதற்காகவே பணியாற்றி வருவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ச கூறினார். வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் கிராமப்புற பொதுமக்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் குறித்த நிதி அவர்களுக்கு உரிய முறையில் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ஞா)

### நல்லாட்சிக்கு...

வழங்கும் கொள்கையுடன் ஜனாதிபதி செயற்பட்டால் நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நிலையே ஏற்படும் என கனிய எண்ணெய் மற்றும் சேவை சங்கத்தின் தலைவர் பந்துல சமன் குமார தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கம் கனிய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தை திருத்தியமைக்க தீர்மானித்துள்ளது. சட்டம் திருத்தியமைக்கப்பட்டதன் பின்னர் கனிய வள கூட்டுத்தாபனத்தை தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான நோக்கம் அரசாங்கத்திடம் உள்ளது. இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றார்.(ஞா)

### தமிழர்களின்...

இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தினை அமுல்படுத்தி நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுமாறு இந்தியா, இலங்கை அரசாங்கத்தைக் கோருவதாக இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் 'அயலுறவுக்கு முதலிடம்' கொள்கையின் பிரதான இலக்காக, இலங்கை முழுவதும் சிறப்பான அபிவிருத்திக்கான இருவழி ஈடுபாடு அமைகிறது.

எரிபொருளைக்கொள்வனவு செய்வதற்கு இந்தியாவிடமிருந்து இலங்கை ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியங்கள் தொடர்பில் சாதகமான பேச்சுக்கள் இரு தரப்பு அரசாங்கங்களுக்கும் இடையில் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவது தொடர்பிலான கேள்விக்குப் பதிலளித்த ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா இலங்கையுடனான இந்தியாவின் உறவு தனித்துவமானது என கூறியுள்ளார்.

இலங்கையின் முன்னேற்றங்கள், ஏனைய நாடுகளுடனான இந்தியாவின் உறவிலிருந்து சுயாதீனமாக உள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இந்தியாவின் அதானி நிறுவனம் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல் மார்க்க தொடர்புகள் மேலும் வலுவடையும் எனவும் இந்திய வெளியுறவு செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஞா-33)


Personal Classes Through Zoom Method
Auto CAD
For Engineering Students
Lecturer By:Mr.K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD (2D-Drawing&3D-Modeling)
University of Peradeniya
Cert.in Auto CAD (Advance 3D-Modeling)
University of Moratuwa
Civil & Mechanical
Link:077-5116320

காணி விற்பனைக்கு
தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில்
4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ( நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் )
பரப்பு 6 இலட்சம்
பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
( தரகர் தேவையில்லை. )
077 814 7389 | 077 614 7333

வீடு விற்பனைக்கு
நல்லூர் செட்டித்தெருவில் 1 1/2 பரப்புக் காணியில் அமைந்த 2 வீடுகள்.
2 கடைகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு
076 702 3565

TECHNA
Technical Institute
Smart thinking leads to innovate
Cargills Square அருகாமையில், யாழ்ப்பாணம்.
A/L தொழினுட்பப் பிரிவு
A/L 2023 புதிய பிரிவு
பொறியியல் தொழினுட்பவியல் - S. மயூரதன் (மன்./முசலி மகா வித்தி.) G.கேதீஸ் (யா/புனித பத்திரிசியார் கல்.)
உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் - M. விஷ்ணுதேவன் (யா/ஸ்கந்தா) K. ஜெயந்தன் (வவு/பூம்புகார் கண்ணகி வித்)
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் - S. சக்தி (யா/ஸ்கந்தவரோதயாக் கல்)
ICT - T. லவன் (B.Sc (Hons) in computer science)
விவசாய விஞ்ஞானம் - S. சஜீபன் (யா/யூனியன் கல்லூரி) M. விஷ்ணுதேவன் (யா/ஸ்கந்தா)
புவியியல் - S.P. கரன் (வட்டு. இந்துக் கல்லூரி)
கணிதம் - G.V. ஹரிகரன் B.Sc (R)
zoom புதிய பிரிவு ஆரம்பம் :- 04.10.2021 திங்கட்கிழமை காலை 8.00
நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக
ZOOM ONLINE CLASSES நடைபெறுகின்றன.
A/L 2022, 2021, Day batch பிரிவுகள் நடைபெறுகின்றன.
தொலைபேசி அழைப்பு மேற்கொள்ளலாம்.
வாராந்த Online Exam நடைபெறுகின்றது.
இலவச Zoom வகுப்புகள் 077 170 3549

BOC Travels
BOC Travels (Pvt) Ltd
Hospital Road, Jaffna.
எமது நிறுவனமானது தற்போதைய Covid-19 பரவல் காலத்திலும் விமானப் பயணச் சீட்டுக்களை வழங்குவதுடன் இணைந்ததான இதர சேவைகளையும் வழங்குகின்றது.
021 222 4575/76
070 384 9335, 070 395 1794

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஒட்டுமடம் - காரைநகர் வீதியில் ஒட்டுமடம் சந்தியில் இருந்து 500m தூரத்தில் 20 அடிப் பாதையுடன் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
இரண்டு பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
( யாழ். மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து 2Km தூரம் )
076 221 2037, 077 288 0152, 076 734 1023

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

அமெரிக்கா செல்ல
பாஸ்போர்ட் எடுத்து விட்டீர்களா?
விளையாட்டு அல்ல இது உண்மை
அமெரிக்க அதிஸ்ட விசா
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்
இலவச வாய்ப்பை தவறவிடுவானேன்?
எல்லோருக்கும் வெளிநாடு செல்ல வசதி இருக்காது ஆனால் 18 வயதிற்கு மேற்பட்ட யாரும் இந்த இலவச வாய்ப்பை பயன்படுத்தலாம்.
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
பாஸ்போட் இல்லாமல் விண்ணப்பிக்க முடியாது
பதிவுகள் ஆரம்பம்- 07-10-2021
உடனடியாக கொழும்பு சென்று One Day Pass Port எடுங்கள்
V2 Travels 0768226244
0768226237 / 0768226240

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
0768226240 DHL

UK-STUDENT VISA
A/L படித்த மாணவர்கள் மற்றும் DIPLOMA / DEGREE முடித்த மாணவர்கள் ஐக்கிய இராச்சியத்தில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள்.
ENGLISH MEDIUM இல் கல்வி கற்றவர்களுக்கு IELTS தேவையில்லை
IELTS இலவசமாக கற்பிக்கப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.5,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.